
மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—13



உரையாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கானடிமை)

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

15179
5·2

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—13

உரையாசிரியர்:

சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம், சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி,

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
(சங்கரன் அடிமை)



துந்துபி ஆண்டு பங்குனி உத்தர
நன்னாள் வெளியீடு
28-3-1983

பிரசுரம்:

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600033.

 1983 [விலை ரூ 3.00

உ

சைவ சமயாசாரியர்

நால்வர் துதி



திருஞான திருநாவுக் சுந்தர மாணிக்க
சம்பந்தர் கரசர் மூர்த்திகள் வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே

திருஞானசம்பந்தர்



மறைவளர் திரு, வைதிகநிலை, வளர்ஞானப்
பொறையணி முகில், புகலியர் புகல்,
பொருபொன்னித் துறைபெறுமணி,
சுருதியின் ஒளி
திருஞானசம்பந்தர்

ஸமர்ப்பணம்

ஓம் விஷ்ணு வல்லபாய நம:

விஷ்ணுவல்லப: என்பது சிவபெருமானுடைய 108 அருச்சனை நாமாவளிகளில் 13-வது திருநாமமாகும். விஷ்ணுவுக்குப் பிரியமானவர் என்பது இதன் பொதுவான பொருளாகும். வெகுகாலம் உபாசனை செய்த விஷ்ணுவுக்கு ஸுதர்சனமென்ற சக்கரத்தைக் கொடுத்ததால் பிரியமானவர் என்று ஒரு சிறப்புப் பொருளும் கூறப்படுகிறது. ஸ்ரீவாமன் சிவராம் ஆப்தே என்பவர் தொகுத்த அகராதியில் வல்லப: (வல்லபன்) என்ற சொற்கு பிரியமானவன், அன்புடையவன் என்பதோடு கணவன் (Husband) என்ற பொருளும் காணப்படுகிறது. எனவே திருமாலின் கணவன் என்ற பொருள் சிறக்கும் என்பது எமது கருத்து. இதனையே அப்பரடிகளும் ''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்று அருளிச் செய்தார். ''மாதொரு பாலும் மாலொரு பாலும் மகிழ்கின்ற நாதன்'' என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு. ''பார்யாத்வம் ஆர்யாபதே'' (ஆதிசங்கரர்) உமாபதியே! திருமால் உனது பார்யையாகவும் ஆனார் என்பது இதன் பொருள். ஐயனார் என்ற ஹரிஹரபுத்திரரின் தோற்றமே இதற்குச் சான்றாகும். ''மாயோன் மகடூஉ ஆகிய காலை தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்... என்பர் சிவஞான முனிவர். எனவே சிவபிரான் விஷ்ணுவல்லபன் என வழங்கப் படுகிறார்.

ஓம் விஷ்ணு வல்லபாய நம: என்ற இந்தப் பதின் மூன்றாவது திருநாம மந்திரத்தால் அருச்சித்து இந்தப் பதின்மூன்றாவது ஞானத் தமிழ் மாலையினைச் சிவ பெருமானுக்கு அணிவிக்கும் நற்பேற்றினை முந்தைய பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பயனால் பெறுகின்றேன்.

இங்ஙனம்

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

சிவம் உரையாசிரியர்.

5-2

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும் வெய்ய கடுநரகத்
திடநமன் ஏவுதற் கெவ்விடத் தான்இருஞ் செந்தமிழால்
திடமன்னு மாமதில் சண்பைத் தலைவன்செந் தாமரையின்
வடமன்னு நீள்முடி யான்அடிப் போதவை வாழ்த்தினமே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி-21
—(நம்பியாண்டார் நம்பிகள் அருளியது - 11ம் திருமுறை)

சண்பை என்னும் பெயருடைய சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தரின் திருவடிகளைச் செந்தமிழ்ப் பாடல்களால் பரவித்துதித்தேன். இனி யான் எவ்வளவு பொய்ம்மைகள் செய்யினும் என்னை நரகத்திட ஆணை பிறப்பிக்க இயமனுக்கு ஏது உரிமை? என்பது மேற்காட்டிய திருப்பாடலின் கருத்தாகும். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளால் இத்தகைய சிறப்புடன் பாடப்பெற்ற திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களை அவரது தலயாத்திரை முறையில் உரையுடன் வெளியிடுதலாகிய இந்த சிவஞான பூசையில் 13வது மாலையாகிய இந்நூல் வெளிவருகின்றது. பெரியபுராணத்தில் வரலாறு கூறப்படாத திருப்பதிகங்களைப் பிரசுரித்தலை 10வது தமிழ் மாலையிலிருந்து மேற்கொண்டதன் கருத்தை அம்மாலையின் பணிவுரையினின்றும் தெரிந்து கொள்ளலாம். அந்த வகையில் திருப்பூந்தராய், திருப்புகலி, திருத்தோணிபுரம்,

திருவேணுபுரம் திருச்சிரபுரம் ஆகிய பெயர்களில் பாடப் பெற்ற வரலாறு அறிய இயலாத சீகாழித்திருப்பதிகங்கள் 10, 11, 12வது தமிழ் மாலைகளில் வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து இந்த 13வது தமிழ் மாலையில் திருவெங்குரு, திருக்கொச்சைவயம், திருச்சண்பைநகர் என்ற பெயர்களில் பாடியருளிய பதிகங்களை வெளியிடுகின்றோம். அன்பர்கள் தொடர்ந்து படித்துத் திருஞானசம்பந்தர் காட்டிய பதிகப் பெருவழியில் சென்று சிவபிரான் திருவருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

இந்தப் பதின்மூன்றுவது தமிழ் மாலைக்கு உரையெழு துங்கால் நேர்ந்த ஐயங்களைத் தமக்கே உரிய புலமையோடு தெளிவாக்கி உதவிய இராணிப்பேட்டை நக்கீரன் வழி யடிமை, சைவசித்தாந்தச் செம்மல், புலவர் உயர்திரு பி. மா. சோமசுந்தரனார் அவர்கட்கும், தூத்துக்குடி சித்தாந் தப் பேரன்பர், சித்தாந்த போதகாசிரியர் உயர்திரு த. சி. ச. இராமச்சங்கு பாண்டியன் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

சென்னை — 33
15-2-1983

சங்கரனடிமை
ஆங்கிரஸ சு. வேங்கடேச சர்மா.
பதிப்பாசிரியர்—உரையாசிரியர்.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை—13

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

திருவெங்குரு—1

(சீகாழி)

பதிக வரலாறு: சிகாழியின் பன்னிரு திருப்பெயர்களில் ஒன்றான திருவெங்குரு என்ற பெயரில் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்துள்ள இரண்டு திருப்பதிகங்களும் ஒன்றன் பின்னொன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை இரண்டு பதிகங்களும் பாடப்பெற்ற காலமோ வரலாறோ ஒன்றும் அறியக்கூடவில்லை. அசுரகுருவாகிய சுக்கிரா சாரியார் இத்தலத்தில் இறைவனைப் பூசித்துத் தேவ

குருவுக்கு இளையாகப் பெருமை பெற்றதால் இத்தலம் வெங்குரு எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. வேறு காரணங்களும் கூறப்படுகின்றன. அவை தக்க இடங்களில் விளக்கப்படும்.

பண்: குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக்
 கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாள
 உதைத்தவன்உமையவள் விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக ஓதம்வந்துலவி
 மறிதிரைசங்கொடு பவளம்முன்னுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த
 வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 1

பதிகப் பொழிப்புரை: 1. நாள்தோறும் நல்ல சிறப்பு உடைய மலர்களைக் கொண்டு திருவடிகளைப் பூசித்துக் கைதொழுத மார்க்கண்டேயரைக் கோபித்த (அவரது உயிரைக் கவர்ந்து செல்ல வந்த) இயமன் ஓலமிட்டு அவன் உயிர் துறக்கும்படி உதைத்தவனும், உமையம்மையாரின் அன்புக்குரியவனுமான எமது பெருமான் (சிவபிரான்), மாலைக்காலம் வந்ததும் கடல்வெள்ளம் பெருகி மறித்து எழும் அலைகள் சங்குகளோடு பவளத்தையும் தள்ளிப் பின் மீண்டும் கடலைச் சார்தலையுடையதும் கடற்கரைச்சோலைகள் சூழ்ந்ததுமான திருவெங்குரு என்னுமித்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருந்தார்.

காலை நன் மாமலர் — அன்றலர்ந்த புதிய மலர் என்றும் பொருள் கொள்ளலாம். நன் மா மலர் என்பதில் நன் என்பது மலர்களின் பரிசுத்தத் தன்மையையும் மா என்பது இறைவரது பூசைக்குரிய சிறப்பினது என்ற பெருமையையும் குறிக்குமெனக் கொள்க.

மாணி — பிரமசாரி, இங்கு மார்க்கண்டேய மகரிஷியைக் குறித்தது. ஓதம் — கடல் வெள்ளம்; வேலை — கடல்

மார்க்கண்டேயர்க்காகக் காலனைக் காய்ந்த பெருமான் திருவெங்குரு என்றதொரு பெயர் பெற்ற சீகாழிப்பதியில் வீற்றிருந்தார் என்பது இப்பாடலிற்போந்த பொருளாகும்.

பெண்ணினைப்பாகம் அமர்ந்துசெஞ்சடைமேல்
பிறையொடுமரவினை அணிந்தழகாகப்
பண்ணினைப்பாடி ஆடிமுன்பலிகொள்
பரமரெம்மடிகளார் பரிசுகள்பேணி
மண்ணினைமூடி வான்முகடேறி
மறிதிரைகடல்முகந் தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கி வந்திழிகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 2

2 உமாதேவியாரை ஒரு பாகமாக விருப்பத்துடன் இருத்திச் சிவந்த தனது சடைமேல் பிறைச் சந்திரனோடு பாம்பினையும் அழகாக அணிந்துகொண்டு, அழகாக இனிய பண்ணுடன் பாடல்களைப் பாடியும் ஆடியும் முன் தாருக வனத்தில் பலிகொண்ட பரமராகிய எமது அடிகளார் (சிவ பெருமான்) தமது இயல்பாகிய கருணையைக் காட்டி, மறித் தெழும் அலைகள் கரையை மூடி வான்முகடு ஏறி மேலும் உயர்ந்து விண்ணளவு ஓங்கி மீண்டும் இறங்குகின்ற திருத் தலமாகிய திருவெங்குருவில் விரும்பி வீற்றிருந்தார்.

பரிசு — தன்மை, இங்கு இறைவரது கருணையின் மேல் நின்றது. திருப்பாடலின் பிற்பகுதி கடல் அலைகளின் உயர்ச்சியைக் குறித்தது. அல்லது சீகாழியைக் கடல் கொண்ட ஞான்று அதில் ஆழாது இருந்ததைக் குறித்த தாகவும் கொள்ளலாம். அங்ஙனங்கொண்டால் கடல் கொண்ட ஞான்று உயர்ந்தோங்கிய கோயிலில் உமாதேவி யாரை ஒருபாகத்திருத்தித் தன் தன்மைகள் விளங்க வீற்றிருந்தார் என்று கூறியதாம்.

ஒரியல்பில்லா உருவமதாகி
ஒண்திறல்வேடன துருவதுகொண்டு
காரிகைகாணத் தனஞ்சயன்தன்னைக்
கறுத்தவற்களித்துடன் காதல்செய்பெருமான்

நேரிசையாக அறுபதமுரன்று
 நிரைமலர்த்தாதுகள் மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும் விம்மியசோலை
 வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 3

3. ஒரு தன்மையும் இல்லாத உருவமதாகிய இறைவர், மிக்க வலிமையுள்ள வேடனது உருவத்தினைக்கொண்டு உமாதேவியார் காணும்படி அருச்சுனனைக் கோபித்துப் பின்னர் அவனுக்கு அருளும்புரிந்து அவனிடம் அன்பு செலுத்திய பெருமானாகிய சிவபிரான், ஒத்த இசையுடன் வண்டுகள் ஒலித்து வரிசையாக உள்ள மலர்களில் மொய்த்ததால் மகரந்தத்தூள் வெளிப்பட்டு அதனால் எங்கும் மணம் பெருக்கெடுத்து வீசுகின்ற சோலைகளையுடைய திருவெங்குரு என்னும் இத்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருந்தார்.

ஓரியல்பில்லா உருவம் ; ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியுமல்லன் என்ற குறிகுணங் கடந்த தன்மை. அத்தகைய பரம்பொருள் அடியார்க்கு அருளும் பொருட்டுப் பல வேடங்களைத் தாங்கி வருகிறது என்பது புலப்படுத்த "ஓரியல்பில்லா உருவமதாகி ஒண்டிறல் வேடனதுருவது கொண்டு..." எனக்கூறியருளினார். முன்னையது சொருப நிலை எனவும், பின்னையது தடத்தநிலை எனவும் கூறப்படும்.

ஒண்டிறல் — ஒண்மையுடைய திறல், ஒண்மை இங்கு மிகுதி என்னும் பொருளில் வந்தது. திறல் — வலிமை, தைரியம்.

காரிகை — இங்கு உமாதேவியார்; தனஞ்சயன்— பாண்டவர் ஐவருள் ஒருவனாகிய அருச்சுனன். கறுத்து — கோபித்து.

காதல் செய் பெருமான் — அருச்சுனனிடம் அன்பு கொண்டருளிய சிவபிரான். வேட உருவங்கொண்டு அருச்சுனனுடன் போர்செய்து பின்னர் அவனுக்கருள் செய்த வரலாறு பலமுறை ஆளுடைய பிள்ளையார் பாடல்களில்

வருதலால் இதனை விளக்கித் தனியே கிராதார்ஜுனீயம் (வேடனும் விசயனும்) என்ற நூல் வெளியிட்டுள்ளோம். விரிவு அந்த நூலில் கண்டுகொள்க.

நேரிசை — ஒரே வகையான இசை. பலவண்டுகள் ஒன்று கூடி ஒலித்தாலும் ஒரே இசையாக ஒலிப்பது கண் கூடு. நேரிசை என்பது ஒரு பண் என்று பொருள் கொள் வாரும் உளர்.

இத்திருப்பாடலின் பிற்பகுதியை "அறுபதம் நேரிசை யாக முரன்று நிரைமலர்த்தாதுகள் மூச விண்டுதிர்ந்து எங்கும் வேரிகள் விம்மிய சோலை வெங்குரு மேவியுள் வீற்றி ருந்தாரே" எனக்கூட்டிப் பொருள்கொள்க.

அறுபதம் — ஆறு கால்களையுடைய வண்டுகள்.

முரலுதல் — ஒலித்தல்; மூசுதல் —மொய்த்தல்; விண்டு உதிர்ந்து — மலர்களினின்றும் வெளிப்பட்டு விழுந்து; வேரி—மணம்.

வண்டணைகொன்றை வன்னியுமத்தம்
மருவியகூவிளம் எருக்கொடுமிக்க
கொண்டணிசடையர் விடையினர்பூதங்
கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்டிகழ்வாகப் பாடியொர்வேதம்
பயில்வர்முன்பாய்புனற் கங்கையைச்சடைமேல்
வெண்பிறைசூடி உமையவளோடும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே.

4. வண்டுகள் வந்து சேருகின்ற கொன்றை மலர், வன்னி, ஊமத்தமலர், பொருந்திய வில்வம் இவைகளை எருக்கம் மலர்களோடு மிகுதியாகக் கொண்டு அணிந்த சடையினை உடையவரும், விடையினை ஊர்தியாகக் கொண்டவரும், பூதகணங்கள் கூடி கொடுகொட்டி, குட முழா முதலிய வாத்தியங்களை வாசிக்க இசைவிளங்கும்படி வேதங்களைப் பாடுபவருமான சிவபெருமான், கங்கையையும்,

வெண்பிறையையும் சடைமேல் சூடி உமாதேவியாருடன் திருவெங்குரு என்னுமித்தலத்தில் விரும்பி எழுந்தருளி இருந்தார்.

வன்னி — ஒரு வகை மரம், இதன் இலை இறைவரது பூசைக்கு உரியது. 'சமீபத்ரம்' என்று வடமொழியில் வழங்கப்படும். விநாயகர் பூசைக்கும் இவ்வன்னி இலை மிகவும் உகந்தது. மத்தம்—ஊமத்தை; கூவிளம் — வில்வம், இது இறைவனுக்கு என்றும் உகந்ததாய் மிகச் சிறப்புடைய தாதலால் மருவிய கூவிளம் என ஓதியருளினர் போலும்.

கொடு கொட்டி — ஒரு வகை வாத்தியம். நடனத்தின் போது வாசிக்கப்படுவது எனத்தெரிகிறது. இப்போது 'கிடு கிட்டி' என வழங்கப்படுவதாகத் திருத்தருமையாதீனக் குறிப்புரை கூறுகிறது.

குடமுழா — ஒரு வகை முழவம். முழவு — மத்தளம், ஈசனர் திருநடனத்தின் போது நந்தீசர் இதனை வாசிப்பர் என்பது 'குடமுழ நந்தீசனை வாசகனுகக் கொண்டார்' என்ற அப்பர் பெருமானின் திருத்தாண்டகத்தால் அறியப் படுகின்றது. (6ம் திருமுறை, 96வது பதிகம், 11ம் பாடல்).

கூடியுமுழவ — பூதங்கள் கூட்டமாகச் சேர்ந்து வாத்தியங்களை ஒலிக்கும்படிச் செய்ய.

பண்டிகழ்வாக — பண்+திகழ்வாக, அதாவது இசை மிக்கு விளங்கும்படி; ஒர் வேதம் — ஒப்பற்ற வேதம்.

'சடைமேல் கங்கையைச் சூடி' என்றும் 'வெண்பிறை சூடி' என்றும் 'சூடி' என்பதை ஈரிடத்துங் கூட்டுக.

சடையினர்மேனி நீறதுபூசித்
  தக்கைகொள்பொக்கண மிட்டுடனுகக்
கடைதொறும்வந்து பலியதுகொண்டு
  கண்டவர்மனமவை கவர்ந்தழகாகப்

படையதுஏந்திப் பைங்கயற்கண்ணி
உமையவள்பாகமும் அமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ் சூழ்தரச்சென்று
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 5

5 சடைமுடியினையுடைய பெருமான், திருமேனி மீது வெண்ணீற்றினைப் பூசித் தக்கை என்னும் வாத்தியத்தை வைத்த துணிப்பையினை தமது உடலின் புறத்தே தொங்க விட்டுக் கொண்டு, ஒவ்வொருவர் வீட்டு வாயிலிலும் வந்து ஐயமேற்றுக் கொண்டு, தமதழகினால் கண்டவர் மனதை யெல்லாம் கவர்ந்து, கையினில் படையும் ஏந்தி, பசிய மீன் போலும் கண்ணினையுடைய உமாதேவியார் ஓர் பாகத்தில் இருத்தலையும் விரும்பி அருள் செய்து, இடபவாகனத்துடன் பூதங்கள் புடைசூழச் சென்று திருவெங்குரு என்னுமித் தலத்தில் விரும்பி வீற்றிருந்தார்.

தக்கை — ஒரு வகை வாத்தியம். பம்பை வாத்தியம் என்ற பொருள் அகராதியில் காணப்படுகின்றது. பொக்கணம் — வாத்தியங்களை மூடிவைக்கும் பை அல்லது உறை.

தக்கை என்னும் வாத்தியத்தை மூடிவைத்த பையினைத் தமது உடலின் ஒரு புறத்தே தொங்கவிட்டு, வீடுகள் தோறும் பிச்சை ஏற்றுத் தமது அழகால் கண்டவர் மனத்தைக் கவர்ந்து உமாதேவியாரை ஒருபாகமாக விரும்பி வைத்துக் கொண்ட பெருமான் திருவெங்குருவில் விரும்பி எழுந்தருளியிருந்தார் என்பதாம்.

கரைபொருகடலில் திரையதுமோதக்
கங்குல்வந்தேறிய சங்கமும்இப்பி
உரையுடைமுத்தம் மணலிடைவைகி
ஓங்குவானிருளறத் துரப்பவெண்டிசையும்

புரைமலிவேதம் போற்றுபூசுரர்கள்
புரிந்தவர்நலங்கொளா குதியினில் நிறைந்த
விரைமலிதூபம் விசும்பினைமறைக்கும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 6

6. கடல் அலைகள் கரைகளில் மோத அதனால் இரவு காலங்களில் கரையில் வந்தேறிய சங்குகளும் இப்பிகளும் உயர்ச்சியுடைய முத்துக்களை மணலில் ஈன, அம்முத்துக்களின் வானளவு ஓங்கிய இருளை முழுதும் நீங்கும்படி ஓட்ட, எல்லாத் திசைகளிலும் உயர்வுடைய வேதங்களைப் போற்று கின்ற அந்தணர்கள் புரிந்த நன்மை மிக்க ஓமாக்கினியினின்றும் எழும் நிறைந்த நெய்மணம் மிக்க புகையானது ஆகாயத்தை மறைத்தலைச் செய்கின்ற திருவெங்குரு என்னும் இத்தலத்தில் (நமது பெருமான்) விரும்பி வீற்றிருந்தார்.

நமது பெருமான் என்னும் எழுவாய் வருவித்து உரைக்கப் பட்டது

அலைகளால் தள்ளப்பட்டுச் சங்குகளும் முத்துச் சிப்பி களும் கரையேறுகின்றன. அங்கே அவை வெண்மணலில் முத்துக்களை ஈனுகின்றன. அந்த முத்துக்கள் தமது ஒளியால் இருளை ஓட்டுகின்றன. அந்தணர்களது ஆகுதிகளினின்றும் எழும் ஓமப்புகை ஒளிமிக்க ஆகாயத்தை மறைத்து இருளாக்குகின்றது என்பது கருத்து. இதனால் முத்துக்களின் மிகுதியும், ஓமங்களின் மிகுதியும் ஒருங்கே கூறியருளிய நயம் கண்டு கொள்க.

பூசுரர் — அந்தணர்கள்; ஆகுதி — ஓமத்தில் விடப்படு கின்ற நெய் இங்கு ஓமக்குண்டத்தையே குறித்தது.

வல்லிநுண்ணிடையாள் உமையவள்தன்னை
மறுகிடவருமத களிற்றினைமயங்க
ஒல்லையிற்பிடித்தங் குரித்தவள்வெருவல்
கெடுத்தவர்விரிபொழில் மிகுதிருஆலில்

நல்லறமுரைத்து ஞானமோடிருப்ப
நலிந்திடலுற்று வந்தவக்கருப்பு
வில்லியைப்பொடிபட விழித்தவர்விரும்பி
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 7

7. கொடி போலும் நுண்ணிய இடையினையுடைய உமாதேவியார் மனங்குழம்பும்படி வந்ததான மதயானையைக் கலங்கும்படி விரைவினிற் பற்றி அதனை உரித்து உமையம்மையாரின் அச்சத்தைப் போக்கியவரும், விரிந்த சோலையில் தெய்வத்தன்மை மிகுந்த கல்லாலமர நீழலில் முனிவர்க்கு நல்ல அறத்தை உரைத்து ஞான நெறியினை (மோன முத்திரையால்) காண்பித்துக் கொண்டு இருக்கையில் வருத்துதலை மேற்கொண்டு வந்த மன்மதனை அவன் பொடியாகும்படித் தமது நெற்றிக் கண்ணால் விழித்தவருமாகிய சிவபிரான் விருப்பத்துடன் திருவெங்குரு என்னுமித் தலத்தில் பொருந்தி வீற்றிருந்தார்.

இத்திருப்பாடல் இறைவரது, கஜாசுரன் என்னும் யானை உரித்த வரலாற்றையும், கல்லாலமர நீழலில் சனகாதி முனிவர் நால்வர்க்கு அறமுரைத்த வரலாற்றையும் கூறுகிறது. வல்லி — கொடி; மறுகிட — மனங்குழம்பும்படி மிகு திரு ஆல் — இதனைத் திரு மிகு ஆல் என மாற்றி தெய்வத் தன்மை மிகுந்த கல்லாலமரம் எனப் பொருள் கொள்க.

கரும்பு வில்லி — மன்மதன், கரும்பை வில்லாக உடையவன் என்பதாம்.

நலிந்திடலுற்று — இறைவர் மீது அம்பெய்து நலிந்திடச் செய்யும் தொழிலை மேற்கொண்டு என்பதாம். இவ்வாறின்றி பிரமதேவன் மிகவும் வற்புறுத்தியும் அச்சுறுத்தியும் மன்மதனை இச்செய்கையில் ஏவினராகலின், இறைவர் திரு முன்பு அம்பெய்யும் எண்ணத்துடன் சென்றால் என்ன நேருமோ என்ற அச்சத்தினால் மன்மதனே வருத்தத்தை

மேற்கொண்டு வந்தான் என்றும் பொருள் கொள்ளலாம். இதன் விரிவு கந்தபுராணம் உற்பத்திக் காண்டத்தில் காண்க.

பாங்கிலாவரக்கன் கயிலையன்றெடுப்பப்
பலதலைமுடியொடு தோளவைநெரிய
ஓங்கியவிரலா லூன்றியன்றவர்க்கே
ஒளிதிகழ்வாளது கொடுத்தழகாய
கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங்
கொன்றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர்
வேங்கைபொன் மலரார் விரைதருகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 8

8. நல்லகுணமற்றவனாகிய அரக்கனான இராவணன் அன்று கயிலையைப் பெயர்த்தெடுக்க முயற்சிக்க அவனது முடிகளோடு கூடிய பத்துத் தலைகளும் தோள்களும் நெரியும் படித் தனது சிறப்பு மிக்க ஒரு திருவிரலால் ஊன்றி அன்றைய தினமே அவனுக்கு ஒளிமிக்கதான வாளையுங் கொடுத்து அருள் செய்தவரும், கோங்கின் மலரோடு செருந்தி வில்வம் ஊமத்தம் கொன்றை இவைகளும் கூடிய சிவந்த சடைமுடியை உடைய செல்வருமான சிவபெருமான், வேங்கை மரங்கள் தமது பொன்னிற மலர்களில் பொருந்திய நறுமணத்தைத் தருகின்ற கோயிலாகிய திருவெங்குரு என்னுமித்தலத்தில் விரும்பி வீற்றிருந்தார்.

பாங்கிலா அரக்கன் — நற்குணமில்லாத அரக்கன். சிவபெருமானின் திருவருளால் தான் பெற்ற மேன்மையை நினைந்து அவரது திருமலையை வணங்கிச் செல்லவேண்டியிருக்க, அதனைத் தனது செல்வச் செருக்கினால் மறந்து திருக்கயிலையைப் பெயர்க்க முயன்றது பெருங்குற்றமாகையால் பாங்கிலா அரக்கன் என ஆளுடையபிள்ளையார் அவனைக் குறிப்பிட்டார்.

ஆறுடைச்சடையெம் அடிகளைக்காண
அரியொடுபிரமனு மளப்பதற்காகிச்
சேறிடைத்திகழ்வா னத்திடைபுக்கும்
செலவறத்தவிர்ந்தன ரெழிலுடைத்திகழ்வெண்
ணீறுடைக்கோல மேனியர்நெற்றிக்
கண்ணினர்விண்ணவர் கைதொழுதேத்த
வேறெமையாள விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 9

9. கங்கையாற்றினையுடைய சடைமுடியைக் கொண்ட எமது தலைவராகிய பெருமானைக் காண்பதற்காகத் திருமாலோடு நான்முகனும் திருவடியையும் திருமுடியையும் காண்போம் என்ற எண்ணத்தராகிப் பூமிக்குள் தோண்டிச் சென்றும், வானத்திடைப் பறந்து சென்றும் காணவியலாது தமது செல்லும் முயற்சியைக் கைவிட்டனர். (அத்தகைய சிறப்பு மிக்க) அழகு திகழ்கின்ற வெண்ணீறு பூசிய மேனியரும், நெற்றிக்கண்ணினரும், தேவர்கள் எல்லோரும் கைதொழுது ஏத்த அவர்களினின்றும் வேருக வைத்து எம்மை ஆளுதலை விரும்பிய விகிர்தருமாகிய சிவபிரான் திருவெங்குரு என்னுமித்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளினர்.

'அரியொடு பிரமனும் அளப்பதற்காகிச் சேறிடைப் புக்கும், திகழ் வானத்திடைப்புக்கும்' எனப் 'புக்கும்' என்பதை ஈரிடத்துங் கூட்டுக.

அளப்பதற்காகி — இங்கு அடி முடி காணும் முயற்சியினராகி எனப் பொருள்தரும்.

சேறு — நிலம் என்ற பொருளில் வந்தது.

செலவற — செல்லுதலை நீக்கி

வேறெமை ஆள விரும்பிய விகிர்தர் — தேவர்களும் கைதொழுது ஏத்துகின்றனர். எனினும் அவர்கட்கு எளிதில் அருளாது எம்மைத் தனியாகச் சிறப்பாக வைத்து ஆட்கொண்டு அருள் புரிகின்ற பெருமான் என்பதாம்.

விகிர்தன் — முரண்பட்ட செயலினையுடையவன்.

தேவர்கள் வணங்குவது தமது சுயநலங்கருதியேயாகும். ஆனால் அடியவர்கள் வணங்குவது இறைவனது திருவடியை விரும்பியாகும், எனவே அடியாரது வணக்கத்துக்குத் தனிச்சிறப்பு உண்டு. இதுபற்றி மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்தது கீழே காண்க.

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து
தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே.

—திருவாசகம் : திருச்சதகம்—16.

(இதன் பொருள்) (சிவபெருமானே) அவர்கள் வாழ்வதற்காகவே தேவர்கள் உன்னைத் தோத்திரஞ் செய்து வணங்குகின்றனர். தங்களது மனதைத் தேவரீர்பால் செலுத்துவதும் தம்மையெல்லாருந் தொழும்படியாகத் தாம் உயர்தலின் பொருட்டேயாம். வண்டுகள் சூழ்ந்து ஒலிக்கும் கொன்றை மாலையணிந்த தேவரீரது திருவடியை நாய் போன்ற அடியேனும் பாழ்பட்ட இப்பிறவியினை நீக்கிக் கொள்ளும் பொருட்டுத் துதிப்பேன்.

இத்திருப்பாடல் தேவர்களது வழிபாட்டுக்கும் அடியாரது வழிபாட்டுக்கும் உள்ள வேறுபாட்டைச் சிறப்பாகக் கூறுகிறது. முன்னையது பயன் கருதிய தவம். பின்னையது பயன் கருதாத் தவம். இவை முறையே 'காம்யம்' எனவும் 'நிஷ்காம்யம்' எனவும் வழங்கப்படும்.

பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர்
பயில்தருமறவுரை விட்டழகாக
ஏடுடைமலராள் பொருட்டுவன்தக்கன்
எல்லையில்வேள்வியைத் தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிநாய் கலந்துடன்சூழக்
கண்டவர்வெருவுற விளித்துவெய்தாய
வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 10

10. துன்பப் படுதலையுடைய புறப்புறச் சமயிகளாகிய பௌத்தர்கள் சமணர்கள் ஆகியோர் கூறுகின்ற அறநெறிக்கு மாறான வார்த்தைகளைக் கொள்ளாது விட்டு, தாட்சாயணி தேவியார் பொருட்டு கொடிய தட்சனுடைய எல்லையில்லாத வேள்வியை அழித்துப் பின்னர் அவனுக்கும் அருள் செய்து கானகத்திடைக் கொடிய நாய்கள் தம்முடன் சூழ்ந்து வரக், கண்டவர் அஞ்சும்படிக் குரல் கொடுத்து கொடிய தான வேடுவககோலம் பூணுதலை விரும்பிய விகிர்தரான சிவபிரான் திருவெங்குரு என்னுமித்தலத்தில் வீற்றிருந் தருவியுள்ளார். அவரைச் சென்று வழிபடுங்கள். (எனச் சில சொற்களை வருவித்துப் பொருள் கொள்க.)

சமண சாக்கியர் பயிலும் மறவுரைவிட்டு திருவெங் குருவில் இறைவனைப் பணியுங்கள் என்பதாம்.

பாடு — துன்பம், உடலைவருத்தும் செய்கைகளால் தமக்கு இம்மையில் துன்பமும், பிறவிக்கே ஏதுவாகிய புன்னெறியிற் செல்லுதலால் மீண்டும் பிறத்தலாகிய மறுமைத் துன்பமும் ஆகிய இருவகைத் துன்பங்களும் அனுபவிக்க வேண்டியவர். இவ்வாறின்றிப் பாடு என்ற சொற்குப் படுதல் என்ற பொருளைக் கொண்டு தாமே தமக்கு அழிவை உடையவர் என்பது இராணிப்பேட்டைப் புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் அனுப்பிய குறிப்பு, மற்றோரிடத் தில் பிள்ளையார் அழிவுடைவிச்சையர் எனக் குறிப்பிட்டிருத்

தலால் இவர் பாடு என்பதற்கு அழிவைப் பொருளாகக் கொண்டனர்.

ஏடுடைமலராள் — இதழ்களோடுகூடிய மலரைச் சூடிய தாட்சாயணி. இறைவன் இடம்பிரியாத் தேவி தட்சன் என்பான் தவஞ்செய்து பெற்ற வரத்தின்படி அவன்பால் பெண்ணாகச் சென்று வளர்ந்தார். அதனால் இப்பெயர் பெற்றார். விரிவு கந்தபுராணம் தட்சகாண்டம் காண்க.

வன்தக்கன் — இறைவர் அருளால் எல்லாப்பெருமை யும் பெற்ற தக்கன் நன்றி கொன்றவனாய் இறைவரை நிந்தனை செய்தமையால் கொடிய தக்கன் எனப்பட்டான்.

எல்லையில் வேள்வி —எல்லையில்லாப் பெருமையுடைய வேள்வி. தக்கன் செய்த வேள்வியின் பெருமையையும் அது அழிக்கப்பட்ட வரலாற்றையும் கந்தபுராணம் தட்ச காண்டம் விரிவாக எடுத்தியம்பும்.

விளித்தல் — காடுகளில் திரியும் வேடுவர் மிருகங்களைப் போலக் கூவியழைத்தல்.

வேடுடைக் கோலம் விரும்பியது அருச்சுனனுக்காக. இதுபற்றிமுன்றும் திருப்பாடல் உரையில் கூறியது காண்க.

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான்
    வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணியநூலன் ஞானசம்பந்தன்
    நவின்றவிவ்வாய்மொழி நலமிகுபத்தும்
பண்ணியல்பாகப் பத்திமையாலே
    பாடியுமாடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர்விமானங் கொடுவரவேறி
    வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. விண்ணளவோங்கிய விமானத்தை விரும்பிய பெருமானும், திருவெங்குருவில் வீற்றிருந்தருளியவருமான

சிவபிரானை, கலைஞானங்கள் அனைத்தும் தாமாகவே வந்தடைந்த ஞானசம்பந்தன் கூறிய வாய்மொழியாகிய நலம் மிக்க இப்பத்தினையும் பண்ணுடன் கூடி பத்திமையோடும் பாடியும் அதற்கேற்ப ஆடியும் பலமுறை ஓதவல்லவர்கள் தேவலோகத்தவர்கள் விமானங்கொண்டு வர அதில் ஏறிச் சென்று அந்த அகன்ற விண்ணுலகத்தை அரசாட்சி செய்து பெருமையுடன் அமர்ந்திருப்பார்கள்.

நண்ணியநூலன் — கலைஞானம் அனைத்தும் ஓதாதே உணர்ந்தவன் என்பதைக் குறிப்பதாம்.

வீற்றிருத்தல் — வீறுடன் இருத்தல்.

வெங்குரு மேவிய பெருமானை ஞானசம்பந்தன் சொன்ன இப்பதிதுப் பாடல்களையும் பாடியும் ஆடியும் ஓத வல்லவர்கள் விண்ணவர்க்கரசு அதாவது இந்திர பதவி பெறுவர் என்பதாம்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை

திருச்சிற்றம்பலம்

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

திருச்சிற்றம்பலம்

(நம்பியாண்டார் நம்பிகள் —11-ம் திருமுறை)

இந்நிலவுலகத்தே மக்களின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு கவுணியர் குலத்துதித்த சைவசிகாமணியாம் திருஞானசம்பந்த மூர்த்திகளின் பொன்னடிகள் எக்காலத்தும் நீங்காது அடியவர்களது உள்ளத்தே இருப்பன, இவ்வுலக மக்கள் நல்ல மலர்களைக் கொண்டு அருச்சிக்கும் தகைமையன. சங்கத்தமிழ் பயின்ற புலவர்களது பாடல்களுக்கு உரிய பொருளாவன. இவ்வாறு திருஞானசம்பந்தரின் திருவடிப் பெருமை நம்பியாண்டார் நம்பிகளால் துதிக்கப்பட்டுள்ளது, சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருவெங்குரு—2

(சீகாழி)

பண்: சாதாரி] திருமுக்கால் [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே 1

பதிகப்பொழிப்புரை : 1. தேவர்கள் தொழுதெழு கின்ற திருவெங்குரு விரும்பி எழுந்தருளிய சுண்ணம் போன்ற வெண்மையான திருநீற்றினை அணியும் சிவ பெருமானே! சுண்ணம் போன்ற வெண்மையான திரு நீற்றினை அணியும் பெருமானாகிய உமது தொழத்தக்கதான திருவடிகளைத் தியானிக்கவல்லவர் இடர்கள் அற்றவர் ஆவர்.

தொழுதெழுதல் — ஒருசொல் நீர்மைத்தாய் வழி படுதல் என்னும் பொருள் தரும். தொழுதல் எழுதல் என்று இரு சொற்களாகக் கொண்டு வணங்குதலையும் அதனால் நற்கதி பெற்று மேல் நிலைக்கு எழுதலையும் குறிக்கும் என்று கொள்வோரும் உளர்.

சுண்ணம் — பொடி, வாசனைப்பொடி. உமகழல் — உம்முடைய திருவடி.

எண்ணுதல் — மனதால் நினைத்தல். தியானம் என்ற வடசொல்லின் பொருளைத் தரும்.

இடர் — துன்பம்.

''தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்

ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.''
—திருவாசகம் போற்றித் திருவகவல்—42-45

என்ற மாணிக்கவாசகப் பெருமானின் திருவாக்குப்படி ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைத் தொடங்கித் தடுத்தலின் திருவடிகளை எண்ணுதலுங்கூட அரிதென்ற கருத்தில் எண்ணவல்லார் எனக் கூறியருளினார் என்க. எண்ணவல்லாரே இடர் இலர் என்று 'ஏ' காரத்தைப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்ளலும் சிறந்தது.

வேதியர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறை யீரே
ஆதிய அருமறை யீருமை அலர்கொடு
ஓதிய ருணர்வுடை யோரே.

2. வேதங்களைக் கற்ற அந்தணர்கள் வழிபடுகின்ற திருவெங்குரு மேவிய முதன்மையான வேதத்தின் பொருளானவரே! முதன்மையான வேதத்தின் பொருளான வரான உம்மை மலர்கள் கொண்டு (பூசித்து) தோத்திரம் செய்பவர்கள் ஞானம் உடையவர்கள் ஆவர்.

ஆதிய — முதன்மையான; பிரமாண நூல்களில் வேதமும் ஆகமமும் முதல் நூல்கள் ஆதலால் ஆதிய அருமறையீர் என்றருளிச் செய்தார். ஆதி நூல் அநாதி அமலன் தருநூல் இரண்டும், ஆரண நூல் பொது (வேதம்) சைவம் அருஞ் சிறப்பு (ஆகமம்) என்று சிவஞானசித்தியார் கூறுதலுங் காண்க.

ஓதியர் — ஓதுதலைச் செய்பவர். உணர்வு — ஞானம், இங்குச் சிவஞானம் என்ற பொருளில் வந்தது.

ஓதியரே உணர்வுடையோர் என ஈற்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிக் கொள்ளவும். இம்மாதிரியே பின்வரும் எல்லாப் பாடல்களிலும் கொள்ளலாம்.

விளங்குதண் பொழிலணி வெங்குரு மேவிய
இளம்பிறை அணிசடை யீரே
இளம்பிறை அணிசடை யீரும திணையடி
உளங்கொள உறுபிணி இலரே. 3

3. பெருமையுடன் விளங்குகின்ற குளிர்ந்த சோலைகள் அழகுசெய்கின்ற திருவெங்குரு மேவிய இளம்பிறைச்சந்திரனை அணிந்து கொண்ட சடையினையுடைய சிவபெருமானே! இளம்பிறைச்சந்திரனைச் சடையிலணிந்த உம்முடைய இரண்டு திருவடிகளையும் உள்ளத்திலே கொள்ள (அங்ஙனம் கொள்பவர்கள்) உற்ற பிணிகள் இல்லாதவர்களாக ஆவார்கள்.

இளம்பிறையணி சடையீர்—தருணேந்துசேகரன் என்ற வடமொழிப்பெயரின் பொருளைத் தரும்.

உளங்கொளல் —உள்ளத்திலே கொள்ளுதல். நினைத்தல். அதாவது தியானித்தலாம். திருவடிதியானம் என்று கூறுவது மரபு.

இறைவரது திருவடிப் பெருமையை அப்பர் அருளிச் செய்த திருவடித் திருத்தாண்டகத்தில் காண்க. (6ம் திருமுறை — பதிகம் 6) 'மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவ்வடி' என்று இப்பதிகத்தின் 9வது திருப்பாடலில் கூறப்பட்டுள்ளதும் காண்க. பிணி என்பது உடற்பிணிமட்டுமின்றி உயிரைப்பற்றியதான பிறவி நோயுமாம்.

விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய
வண்டமர் வளர்சடை யீரே
வண்டமர் வளர்சடை யீருமை வாழ்த்துமத்
தொண்டர்கள் துயர்பிணி இலரே. 4

4. முறுக்குடைந்து விரிகின்ற மலர்களையுடைய சோலைகள் அணிசெய்கின்ற திருவெங்குரு மேவிய வண்டுகள் விரும்பும் சடைமுடியையுடைய பெருமானே! வண்டுகள்

விரும்பும் சடையினையுடைய பெருமானாகிய உம்மை வாழ்த்தும் அச்சிறப்புடைய தொண்டர்களே துயரும் பிணியும் அற்றவர்கள் ஆவார்கள்.

இறைவனார் சடை மீது மலர்மாலைகளை அணிந்து கொள்ளுதலால் அவற்றை வண்டுகள் அணையுமாதலால் வண்டமர் சடை எனக் கூறியருளினார்.

அமர்தல் –விரும்புதல்; துயர் –உள்ளத்தைப் பற்றியது. பிணி — உடலைப் பற்றியது. எனவே துயர், பிணி என இருவகையாகக் கூறியருளினார்.

மிக்கவர் தொழுதெழு வெங்குரு மேவிய
அக்கினொ டரவசைத் தீரே
அக்கினொ டரவசைத் தீரும தடியிணை
தக்கவர் உறுவது தவமே. 5

5. சிறப்புடையவர் (அதாவது பெரியோர்) வணங்கியெழுகின்ற திருவெங்குரு மேவிய எலும்புமணி மாலையோடு பாம்பினையும் தரித்தவரே! எலும்பினோடு பாம்பினையும் தரித்த பெருமானாகிய உமது இணையடிகளைத் துதிக்கும் தகுதி பெற்ற அடியவர்கள் பெறுவது சிறந்த தவத்தின் பயனாகும்.

மிக்கவர் — பெரியோர், கற்றல் கேட்டல் உடையவர் என்பதாம்.

அக்கு — எலும்பு, சங்கு மணியுமாம்.

தக்கவர் — தகுதியுடையவர், அடியவர்கள் என்பதாம். உறுவது — அடைவது. தவம் — இங்குத் தவத்தின் பயன் எனப் பொருள் தரும். இறைவரது திருவடிகளைப் போற்றுவதே தவமும் அதன் பயனுமாம் எனக் கொள்க.

வெந்தவெண் பொடியணி வெங்குரு மேவிய
அந்தமில் பெருமையி னீரே
அந்தமில் பெருமையி னீருமை அலர்கொடு
சிந்தைசெய் வோர்வினை சிதைவே. 6

6. சுடப்பட்ட வெண் பொடியாகிய திருநீறு அணிந்த திருவெங்குரு மேவிய முடிவில்லாத பெருமையுடைய வராகிய சிவபெருமானே! முடிவில்லாப் பெருமை உடைய வராகிய உம்மை மலர்கள் கொண்டு (பூசித்து) சித்தத்தில் நினைப்பவர்களது வினைகள் சிதைந்து போகும்.

அந்தமில் பெருமை — எல்லையில்லாப் பெருமை - சிவ பெருமானது பெருமைக்கு முடிவே இல்லையாதல்பற்றி இங்ஙனம் கூறியருளினர்.

சிந்தை செய்தல் — தியானித்தல்.

"சமுத்திரமே பாத்திரமாகவும், நீலமலையே மையாக வும், கற்பக விருட்சத்தின் கிளையே எழுதுகோலாகவும், இந்த பூமியே ஓலையாகவும் கொண்டு ஸரஸ்வதி தேவியே ஸர்வகாலமும் எழுதினாலும்கூட இறைவனுடைய பெருமை முற்றிலும் எழுதி முடித்து விடமுடியாது' என்ற புஷ்ப தந்தர் என்பவர் பாடிய சிவமஹிம்னஸ்தோத்ரம் என்ற வடமொழி ஸ்தோத்ரம் 32வது பாடலின் கருத்து இங்கு ஒப்புநோக்கற்குரியது.

விழமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அழல்மல்கு மங்கையி னீரே
அழல்மல்கு மங்கையி னீருமை அலர்கொடு
தொழவல்லல் கெடுவது துணிவே. 7

7. திருவிழாக்கள் நிறைந்ததும் பொழில்கள் அணி செய்வதுமான திருவெங்குரு மேவிய தீ நிரம்பிய அழகிய கையினையுடையவரே! தீ நிரம்பிய அழகிய கையினையுடைய வராகிய உம்மை மலர்கள் கொண்டு பூசிக்க (அவ்வாறு பூசிப்பவரது) அல்லல்கள் கெடுவது நிச்சயமாகும்.

அல்லல் — துன்பம்; கெடுதல் — நீங்குதல்.

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்தநன் மலர்புனை வீரே
மத்தநன் மலர்புனை வீரும தடிதொழுஞ்
சித்தம துடையவர் திருவே. 8

8. சதுரப்பாடு உடைய மறையவர்கள் நிறைந்த திருவெங்குரு மேவிய ஊமத்தையின் நல்ல மலரினைப் புனைந்து கொள்ளும் சிவபெருமானே! ஊமத்தையின் நல்ல மலரினைப் புனைந்து கொள்வீராகிய உமது திருவடிகளைத் தொழுகின்ற மனமுடையவர் திருவுடையவர் ஆவார்.

வித்தகம் — சதுரப்பாடு, திறமை; மறையவர்க்கு சதுரப்பாடு யாதெனில் அவர்கள் பயின்ற வேதங்களில் திருமால், பிரமன், இந்திரன் போன்றவர்க்கும் சிறப்பு கூறியிருப்பினும் அவையெல்லாம் உபசாரமேயன்றி உண்மையாகாது என்பதையும், சிவபிரானைப் போற்றிய, பகுதிகளே உண்மையானவை என்பதையும் தமது கூர்த்த மதியினால் அறிந்து கொண்டு சிவவழிபாட்டில் திளைத்தலாம்.

மத்தமலர் — பொன்னூமத்தம் மலர். திரு - செல்வம், இது இம்மைச் செல்வத்தையும், மறுமையாகிய முத்தித் திருவையும் குறிக்கும், 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என முன்னரும் பிள்ளையார் அருளிச் செய்துள்ளமை காண்க. (1-ம் திருமுறை, கோயில், குறிஞ்சிப்பண்ணில் அமைந்த பதிகம், 5-ம் பாடல் பார்க்க)

மேலவர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆலநன் மணிமிடற் றீரே
ஆலநன் மணிமிடற் றீரும தடிதொழுஞ்
சீலம துடையவர் திருவே 9

9. மேன்மைக் குணமுள்ளவர்கள் தொழுதெழுகின்ற திருவெங்குரு மேவிய விஷம் தங்கிய நல்ல காளகண்டத்தை யுடையவரே! விஷம் தங்கிய நல்ல காளகண்டத்தையுடையவராகிய உமது திருவடிகளைத் தொழுகின்ற நல்லொழுக்கம் உடையவரே திருவுடையவர் ஆவார்.

ஆலம் — விஷம்; மணி மிடறு — நீலகண்டம், காளகண்டம், அழகிய கழுத்து எனலுமாம். கழுத்தில் தங்கிய விடம் ஒரு நீல மணி போல அமைந்து பெருமானுக்கு அழகு செய்வதாயிற்று. மிடறு — கழுத்து,

மேலவர் —பெரியோர்கள், மேலுலகத்தவராகிய தேவர்கள் எனலுமாம்.

சீலம் — வழிபாட்டு முறை எனலுமாம்.

விரைமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அரைமல்கு புலியத ளீரே
அரைமல்கு புலியத ளீரும தடியிணை
உரைமல்கு புகழவ ருயர்வே. 10—11

திருச்சிற்றம்பலம்

10. மணம் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த திருவெங்குரு மேவிய அரையில் கட்டிய புலித்தோல் ஆடையையுடைய பெருமானே! அரையில் கட்டிய புலித்தோலாடையையுடைய பெருமானாகிய உமது இரண்டு திருவடிகளையும் நிரம்பிய சொற்களால் புகழ்தலையுடையவரே உயர்வடைவர்.

உரை மல்கு புகழவர் — சொற்களால் உம்மை நிரம்பப் புகழ்வதையே தமது கடனாகக் கொண்டவர். அவர்கள் வாழ்க்கையில் உயர்வடைவர் என்பதாம். இவ்வாறின்றி உம்மைப் புகழ்தலையுடையவர்களது உயர்வே உண்மையான உயர்வாகும் என்ற கருத்து திருத்தருமை ஆதினக் குறிப்புரையில் காணப்படுகிறது.

"...அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே" என்ற அப்பரடிகளின் திருவாக்கும் ஈண்டு கவனத்திற்குரியது.

இத்திருப்பதிகத்தின் 11வது திருப்பாடல் சிதைந்து போய்க் கிடைக்காதாயிற்று.

திருமுக்கால் என்ற இப்பதிகத்தின் பெயர்க் காரணம் முன்னர் த. மா. 6, 31ம் பக்கத்தில் கூறியது கண்டுகொள்க.

சிவம்

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருக்கொச்சைவயம்—1

(சீகாழி)

பதிகவரலாறு : சீகாழிக்குரிய வரலாறு தெரியாத திருப்பதிகங்களில் திருக்கொச்சைவயம் என்ற பெயரில் பாடியருளியவை இதுவும் இதனையடுத்து வரும் இரண்டு திருப்பதிகங்களுமாம்.

மச்சகந்தி என்ற வலைஞர் குலத்துப் பெண்ணைக் கூடிய பழிச்சொல் நீங்கப் பராசரர் பூசித்தமையால் கொச்சைவயம் எனப்பெயர் பெற்றது என்பர்.

பண்: பியந்தைக்காந்தாரம்] [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீலநன் மாமிடற்றன் இறைவன் சினத்த
நெடுமா உரித்தநிகரில்
சேலன கண்ணிவண்ணம் ஒருகூ றுருக்கொள்
திகழ்தேவன் மேவுபதிதான்
வேலன கண்ணிமார்கள் விளையாடு மோசை
விழவோசை வேதவொலியின்
சாலநல் வேலையோசை தருமாட வீதி
கொடியாடு கொச்சைவயமே. 1

பதிகப்பொழிப்புரை : *1.* திருநீலகண்டத்தையுடையவனும், இறைவனும், கோபத்தையுடைய பெரிய யானையினை உரித்தவனும், மீன் போன்ற கண்ணையுடைய உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்ட உருவுடன் திகழ்கின்ற ஒப்பில்லாத கடவுளாகிய சிவபிரான் விரும்பி எழுந்தருளிய பதி (யாதெனில்), வேல் போன்ற கண்களை உடைய மகளிர் விளையாடுகின்ற ஓசையும் திருவிழாக்களின் ஓசையும் வேதமுழக்கத்தின் ஓசையும் சேர்ந்து மிக்க கடல் ஓசையினைத் தருகின்ற மாடவீதிகளில் கொடிகள் ஆடுகின்ற திருக்கொச்சைவயம் ஆகும்.

நிகரில் என்பதை இறைவன் என்பதுடன் கூட்டி நிகரில் இறைவன் எனவுங் கொள்ளலாம். தேவன் என்பதுடன் கூட்டி நிகரில் தேவன் எனவுங் கொள்ளலாம்.

சேல் — ஒரு வகை மீன். மீன் போன்ற கண்களை உடைய தேவியார் மீன் கண்ணி (மீனாட்சி) என வழங்கப் படுகிறார்.

வேலனகண்ணி — வேல் போன்ற கூர்மையை உடைய கண்களையுடைய பெண். பார்வையின் கூர்மை கண்ணின் மேலேற்றிச் சொல்லப்பட்டது.

திருக்கொச்சைவயம் என்றதொரு பெயர் கொண்ட சீகாழிப்பதியில் கொடிகள் ஆடும் மாடவீதிகளில் பெண்கள் விளையாடுகிறார்கள், விழாக்கள் நடைபெறுகின்றன, வேதியர்கள் வேதமோதுகின்றனர். இவற்றின் ஓசையெல்லாம் திரண்டு கடலோசை போன்று மிக்குப் பேரோசையாய் விளங்குகின்றது என்பது பின்னிரண்டடிகளின் திரண்ட பொருளாகும். இத்தகைய சிறப்பு மிக்க பதியாகிய திருக் கொச்சைவயமே நீலகண்டனும், எல்லோர்க்கும் ஈசனும், கஜாசுரனை உரித்தவனும், மாதொருபாகனும், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்றவனுமான சிவபெருமான் மேவிய பதியாகும் என்பது முழுப்பாடலின் கருத்தாகும்.

நிகரில் தேவன் — 'தனக்குவமையில்லாதான்' என்ற திருக்குறள் சொற்றொடரின் பொருளைக் குறித்தது. மேலும் 'தத் ஸமோ நாஸ்தி லோகேஷு ந வரோ நாபர: க்வசித்' என்ற ஸ்காந்தபுராணம்—தக்ஷ காண்டம்—12ம் அத்தியாயத்தில் ததீசி முனிவர் தக்ஷனுக்குக் கூறியதாய் அமைந்த புராணவாக்கும் இங்கு கருதுதற்குரியது. உலகில் இவருக்கு இணையானவரோ மேம்பட்டவரோ கிடையாது என்பது இவ்வாக்கியத்தின் பொருளாகும்.

விடையுடை அப்பனெப்பில் நடமாட வல்ல
விகிர்தத் துருக்கொள்விமலன்
சடையிடை வெள்ளெருக்க மலர்கங்கை திங்கள்
தகவைத்த சோதிபதிதான்

மடையிடை அன்னமெங்கும் நிறையப் பரந்து
கமலத்துவைகும் வயல்சூழ்
கொடையுடை வண்கையாளர் மறையோர்க ளென்றும்
வளர்கின்ற கொச்சைவயமே. 2

2. இடப வாகனத்தையுடைய உலகத்தந்தையும், ஒப்பில்லாத ஆனந்தத் திருக்கூத்தியற்ற வல்லவனும், மாறுபாடுகள் உடைய பல வடிவங்களைக் கொள்கின்ற விமலனும், சடையினிடத்தில் வெள்ளெருக்கம் மலர், கங்கை, சந்திரன், இவைகளைப் பொருந்துமாறு வைத்த சோதி வடிவினனுமான சிவபெருமானுடைய திருப்பதியாவது (யாதெனில்), மடைகளில் அன்னங்கள் நிறைந்து பரவித் தாமரை மலர்களில் வசிக்கின்ற வயல்கள் சூழ்ந்ததும் பிறர்க்குக் கொடுத்தல் என்ற வள்ளன்மையில் மிக்க வளமையுடைய கைகளையுடையவர்களாகிய மறையவர்கள் எக்காலத்தும் வளர்ந்து வருதலையுடைய திருக்கொச்சைவயம் ஆகும்.

அப்பன் — தந்தை. 'மாதா ச பார்வதீ தேவீ, பிதா தேவோ மஹேச்வர:' (ஆதி சங்கரர்) 'ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ-பரமேச்வரௌ' (மஹாகவி காளிதாஸர்) உலகின் தாய் பார்வதி தேவி, தந்தை பரமேச்வரர் என்பது இவ்வாக்குகளின் பொருளாகும். திருமுறைகளில் இறைவனைத் தந்தையாகச் சொல்லுமிடங்கள் அனந்தம். வருமிடங்களிலெல்லாங் கண்டு கொள்க.

ஒப்பு இல் நடம் — 'ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து' என்பது தெய்வச் சேக்கிழாரின் திருவாக்கு. (பெரிய புராணம் 1 தடுத்தாட்கொண்ட புராணம்—106ம் திருப்பாடல்) உவமையில்லாத ஞானத் திருக்கூத்து என்பது திருத்தருமையாதீனக் குறிப்புரை.

விகிர்தத்துருக்கொள் விமலன் — 'பல பல வேடமாகும் பரன் நாரி பாகன்' என்று திருஞானசம்பந்தர் பின்னரும் கூறுவர் (கோளறு திருப்பதிகம் 9ம் திருப்பாடல்).

விமலன்—இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன்.

சோதிபதி — சோதியினுடைய பதி என ஆறும் வேற்றுமை விரித்துப் பொருள் கொள்க. சோதி — ஒளிப் பிழம்பின் வடிவானவன். ‘அலகில் சோதியன்’ என்பது தெய்வப்புலமைச் சேக்கிழார் திருவாக்கு. ‘சோதியே சுடரே சூழொளி விளக்கே’ (திருவாசகம் : அருட்பத்து— 1ம் திருப்பாடல்). திருமுறைகளில் இறைவனைச் சோதி யாகக் கூறியுள்ள இடங்கள் எண்ணில.

மடை — நீர் பாயும் மடை, மதகு, வாய்க்கால் போன்ற பொருள்களைத் தருஞ்சொல்.

நீர் பாயும் வாய்க்கால்களில் அன்னங்கள் நிறைந்து இருக்கின்றன. அவைகள் வயல்களில் உள்ள தாமரைமலர் களில் வசிக்கின்றன. அத்தகைய அன்னங்கள் வைகும் தாமரைகளையுடைய வயல்கள் சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்பது மூன்றுமடியின் கருத்தாகக் கொள்க. சீகாழியின் வயல் வளம் கூறப்பட்டது.

கொடையுடை வண்கையாளர் என்பதை மறையோர் களுக்கு அடைமொழியாக்கி நாம் உரைத்ததற்கு மாறுகக் கொடையுடை வண்கையாளரும் மறையோர்களும் வளர் கின்ற கொச்சைவயம் எனக் கொள்ளினும் பொருந்தும்.

படவர வாடுமுன்கை உடையா னிடும்பை
  களைவிக்கு மெங்கள்பரமன்
இடமுடை வெண்டலைக்கை பலிகொள்ளு மின்பன்
  இடமாய வேர்கொள்பதிதான்
நடமிட மஞ்ஞைவண்டு மதுவுண்டு பாடு
  நளிர்சோலை கோலுகனகக்
குடமிடு கூடமேறி வளர்பூவை நல்ல
  மறையோது கொச்சைவயமே. 3

3. படமெடுத்தாடும் பாம்பினை முன்கையில் கங்கண மாக உடையவனும், வழிபடுபவரது துன்பங்களைக் களைவிப் பவனுகிய எங்கள் பரமனும், தனது கையிடத்தே கொண்ட

வெண்தலையில் பலிகொள்ளும் ஆனந்தவடிவினனுமாகிய சிவபிரானது வேர்கொள் பதியாவது (யாதெனில்), மயில்கள் நடனமாட வண்டுகள் தேனையுண்டு பாடுதலைச் செய்யும் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்ததும், பொற்குடங்கள் இடப்பெற்ற கூடங்களில் வளர்தலையுடைய பூவைகள் நல்ல மறைகளை ஓதுகின்றதுமான திருக்கொச்சைவயம் ஆகும்.

இடும்பை களைவிக்கும் எங்கள் பரமன் — எங்கள் இடும்பை களைவிக்கும் பரமன் என மாற்றியும் பொருள் கொள்ளலாம்.

இடும்பை — இச்சொல் துன்பம், அச்சம், தரித்திரம், பொல்லாங்கு முதலிய பொருள்களைத் தரும்.

வேர் கொள் பதி — நீங்காது நிலைத்து இருக்கும் பதி நளிர் — குளிர்ச்சி; **கோலுதல்** — சூழ்தல்.

பூவை —கிளிகளைப்போல் கற்பித்தவற்றையும், கேட்டுப் பழகியவற்றையும் பேசுந்தன்மை வாய்ந்த ஒரு புள் என்பர். நாகணவாய்ப் பறவை எனப்படும். இவை மறையோதுதல் எங்ஙனமெனின், மறையவர்கள் வேதங்களை ஓதுங்கால் கேட்டிருந்த பழக்கத்தாலென்க.

எண்டிசை பாலரெங்கும் இகலிப் புகுந்து
முயல்வுற்ற சிந்தைமுடுகிப்
பண்டொளி தீபமாலை இடுதூப மோடு
பணிவுற்ற பாதர்பதிதான்
மண்டிய வண்டன்மிண்டி வருநீர பொன்னி
வயல்பாய வாளைகுழுமிக்
குண்டகழ் பாயுமோசை படைநீட தென்ன
வளர்கின்ற கொச்சைவயமே. 4

4 எட்டுத் திசைகளின் காவலர்களும் தங்களுக்குள் மாறுபாடு கொண்டு ஒவ்வொருவரும் வழிபாட்டிலே முடுகிய சிந்தையுடையவராய் தீபவரிசைகள், தூபம்

இவற்றோடு பண்டு பணிந்து வழிபட்ட திருப்பாதங்களை உடைய சிவபெருமானது பதியாவது (யாதெனின்) மிகுதியான நீர்ச்சுழிகளுடன் வேகமாக வருந்தன்மையுடைய காவிரியின் நீர் வயல்களிலே பாய்தலால் அங்குள்ள வாளை மீன்கள் கூட்டமாக ஆழமான அகழிகளில் பாய்கின்ற ஓசையானது படைவீரர்கள் அணிவகுத்துச் செல்லும் பேரோசை போன்று பெருகுகின்ற திருக்கோச்சைவயம் ஆகும்.

அட்டதிக் பாலகர்கள் ஒருவருக்கொருவர் தாம் முந்தி வழிபாடு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தால் தம்முள் இகலி வழிபட்டனர் போலும். இது தலபுராணச் செய்தியாக இருக்கக்கூடும்.

மண்டுதல் — நெருங்குதல், மிகுதல்; மிண்டுதல் — வேகமாகச் செல்லுதல்; வண்டல் — நீர்ச்சுழி; குண்டு — ஆழம்; அகழி — மதில் சூழ் நீர்க்கிடங்கு.

நீர்ச்சுழிகளுடன் வேகமாக வருகின்ற காவிரியின் நீர் வயல்களில் பாய்கின்றது. அந்த வேகத்தால் வயல்களில் வசிக்கும் வாளைமீன்கள் கூட்டமாக ஓடிச் சென்று ஆழமான நீர்க்கிடங்குகளில் பாய்கின்றன. அவ்வாறு வாளைகள் பாயுமோசை படைவீரர்கள் அணிவகுத்துச் செல்லும் போது உண்டாகும் ஓசை போல் மிக்கிருந்தது என்பது பின் இரண்டடிகளில் கூறியருளிய செய்தியாகும்.

பனிவளர் மாமலைக்கு மருகன் குபேர
    னொடுதோழமைக் கொள்பகவன்
இனியன அல்லவற்றை இனிதாக நல்கும்
    இறைவன் னிடங்கொள்பதிதான்
முனிவர்கள் தொக்குமிக்க மறையோர்கள் ஓமம்
    வளர்தூமம் ஓடியணவிக்
குனிமதி முடிநீடும் உயர்வான் மறைத்து
    நிறைகின்ற கோச்சைவயமே. 5

5. பனிமா மலையாம் இமயமலையரசனுக்கு மருகனும், குபேரனோடு தோழமை கொண்ட அறுகுணபரிபூரணனும்

இன்னாதவற்றையெல்லாம் இனியனவாக ஆக்கியருள்பவனு மாகிய இறைவன் தனக்கு இருப்பிடமாகக் கொள்கின்ற பதியாவது (யாதெனில்) முனிவர்கள், மறையவர்கள் ஒருங்குகூடி இயற்றுகின்ற ஓமத்தினின்றும் எழும் புகை யானது மேலே எழும்பிச் சென்று சந்திரனை மறைத்து உயர்ந்த வானத்தையும் மறைத்து நிறைகின்ற திருக் கொச்சைவயம் ஆகும்.

பகவன் — அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் என்னும் ஆறு குணங்களும் 'பகம்' எனப்படும். இவற்றையுடைய சிவபெருமான் பகவன் அல்லது பகவான் என வழங்கப்படுவர். எனவே அறுகுண பரிபூரணன் என்று எம்மால் பொருள் உரைக்கப் பட்டது.

பிறவியும் அதன்பின் நுகரும் உலகவாழ்க்கையும் இன்னாதது என்பது அனைவரும் ஒப்புக்கொள்வது. எனினும் அவற்றை இனியனவாக உயிர்கள் விரும்பும்படிச் செய்வது இறைவனது திரோதான சத்தி என்னும் மறைப்பாற்ற லாகும். இதையே இனியனவல்லவற்றை இனிதாக நல்கு தல் எனக்குறிப்பிட்டருளினார் என்க.

பின்னிரண்டடிகளால் வேள்விப்புகையால் வானம் மறைக்கப் படுதலைக் கூறுமுகத்தால் வேள்விகளின் மிகுதி யைக் கூறினார். இத்தகைய வேள்விச்சிறப்புமிக்க திருக் கொச்சைவயம் என்னும் பதியே மலையரசனின் மருகனும் குபேரன் தோழனும், அறுகுணபரிபூரணனுமாகிய இறைவன் இடங்கொண்ட பதியாகும் என்பது இப்பாடலின் திரண்ட கருத்தாகும்.

புலியதள் கோவணங்கள் உடை ஆடையாக
உடையான் நினைக்குமளவில்
நலிதரு முப்புரங்கள் எரிசெய்த நாதன்
நலமாவிருந்த நகர்தான்

கலிகெட அந்தணாளர் கலைமேவு சிந்தை
உடையார் நிறைந்துவளரப்
பொலிதரு மண்டபங்கள் உயர்மாட நீடு
வரைமேவு கொச்சைவயமே. 6-7

6—7. புலியின் தோலை கோவண உடையும் ஆடையுமாக உடையவனும், உலகத்தையெல்லாம் துன்பப்படுத்திய முப்புரங்களையும் நினைத்தமாத்திரத்தில் எரிசெய்த நாதனும் ஆகிய சிவபெருமான் அழகாக எழுந்தருளியிருந்த நகராவது (யாதெனின்) வறுமை கெடும்படி அந்தணாளர்களாகிய வேதம் முதலிய கலைகள் பொருந்திய சிந்தையுடையவர்கள் நிறைந்து வளர்தலையுடையதும், அழகுடைய மண்டபங்களும் உயர்ந்த மாடங்களும் மலையளவு உயர்ந்து விளங்கும் திருக்கொச்சைவயம் ஆகும்.

நினைக்குமளவில் — எரிக்கவேண்டுமென்ற நினைப்பு உண்டான அதே நேரத்தில்; 'சங்கல்ப மாத்திரத்தில்' எனக் கூறுவது வழக்கு.

நலம் — அழகு அல்லது நன்மை.

அந்தணாளர்கள் கற்றுங்கெரியோம்பிக் கலியை வாராமே செய்யும் திறலுடையவர்களாகலின் அவர்கள் வளர்தலால் கலிகெடும் என்பதை "கலிகெட அந்தணாளர்.......... நிறைந்து வளர" எனக் கூறியருளினார். கலி – வறுமை, துன்பம். அந்தணாளர் -- அழகிய தண்மையை ஆள்பவர்; அதாவது பிறஉயிர்களிடத்து அருள் உடையவர் என்பதாம்

மழைமுகில் போலுமேனி அடல்வாள் அரக்கன்
முடியோடு தோள்கள்நெரியப்
பிழைகெட மாமலர்ப்பொன் அடிவைத்த பேயொ
டுடனாடி மேயபதிதான்
இழைவளர் அல்குல்மாதர் இசைபாடி யாட
விடுமுச லன்னகமுகின்
குழைதரு கண்ணிவிண்ணில் வருவார்கள் தங்கள்
அடிதேடு கொச்சைவயமே. 8

8. மழையைப் பொழியும் மேகம் போன்று கறுத்த மேனியுடைய வலிமையுடைய வாளரக்கனாகிய இராவண னுடைய தலைகளோடு தோள்களும் நெரியும்படியும் அவனது குற்றம் நீங்கும்படியும் தனது பெருமையுடைய அழகிய திருவடியை வைத்த பேயோடாடியாகிய சிவபிரான் பொருந்திய திருப்பதியாவது (யாதெனில்) மேகலை முதலிய அணிகலன்களையணிந்த மாதர்கள் இசைகளைப் பாடியாடுவ தற்கு விடுகின்ற ஊசல்கள் போன்று ஆடுகின்ற பாக்கு மரங்களின் தளிர்களாகிய கண்ணிகள் விண்ணிலே வருவாரது பாதங்களைச் சிக்கவைக்கும் திருக்கொச்சை வயம் ஆகும்.

மழை முகில் — மழையைப் பொழியும் மேகம். அதா வது கார் காலத்து மேகம். கார் முகில் எனலுமாம்.

மாதர் இசைபாடியாட விடும் ஊசல் அன்ன கமுகின் குழை — பாக்கு மரங்களின் தழை உயரத்தில் ஆடுவது பெண்கள் ஆடிவிடும் ஊஞ்சல் போன்றிருந்தது என்பதாம்.

குழைதரு கண்ணி விண்ணில் வருவார்கள் தங்கள் அடிதேடும் — பாக்கு மரங்களின் உச்சித் தளிர்கள் விண்ணிலே வருவோரது கால்களை வலைபோலச் சிக்க வைக்கும் என்று கூறியதாம். இதனால் கமுக மரங்களின் உயர்ச்சி கூறப்பட்டது. கண்ணி — வலை.

வண்டமர் பங்கயத்து வளர்வானும் வைய
முழுதுண்ட மாலுமிகலிக்
கண்டிட ஒண்ணுமென்று கிளறிப் பறந்தும்
அறியாத சோதிபதி தான்
நண்டுண நாரைசெந்நெல் நடுவே யிருந்து
இரைதேர போதுமதுவிற்
புண்டரி கங்களோடு குமுதம் மலர்ந்து
வயல்மேவு கொச்சைவயமே. 9

9. வண்டுகள் வந்து பொருந்துகின்ற தாமரை மலரில் வளர்பவனாகிய பிரமதேவனும் உலகம் முழுவதையும்

உண்டவனாகிய திருமாலும் தம்முள் பகைமை கொண்டு தம்மால் கண்டிட முடியுமென்று (திருமால்) பூமியைத் தோண்டியும் (பிரமதேவன்) விண்ணிலே பறந்தும் அவர்கள் அறியாத சோதியாகிய சிவபிரானது பதியாவது (யாதெனில்) நண்டுகள் தமது இரையை உண்ணவும், நாரைகள் செந்நெல் பயிர்களின் நடுவேயிருந்து தமக்குரிய இரையைத் தேடவும், தேன்நிறைந்த போதுகளாகிய தாமரைகளோடு ஆம்பலும் மலர்ந்து வயல்களில் நிறைந்த திருக்கொச்சைவயம் ஆகும்.

அறியாத சோதி — ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி (திருவெம்பாவை 1ம் பாடல்)

வையமுழுதுண்ணும் திறல் படைத்தோனாயினும் அவன் பூமியைக் கிளறிச் சென்றும் அடி காண இயலவில்லை. பங்கயத்து வளர்வோனாயினும் அவன் விண்ணிலே பறந்தும் முடி காண இயலவில்லை விரிவு கந்தபுராணம், தட்ச காண்டம், அடிமுடி தேடு படலத்திற் காண்க.

கையினி லுண்டுமேனி உதிர்மாசர் குண்டர்
இடுசீவ ரத்தினுடையார்
மெய்யுரை யாதவண்ணம் விளையாட வல்ல
விகிர்தத் துருக்கொள்விமலன்
பையுடை நாகவாயில் எயிறுர மிக்க
குரவம் பயின்றுமலரச்
செய்யினில் நீலமொட்டு விரியக் கமழ்ந்து
மணநாறு கொச்சைவயமே. 10

10. கையினில் உணவேற்று உண்டு, உடலிலிருந்து உதிர்கின்ற அழுக்கினையுடையவர்களான குண்டர்களாம் சமணர்களும், பழுப்பு நிறமூட்டிய உடையினையுடையவர்களாகிய புத்தர்களும் உண்மைப் பொருளை அறிந்து உரையாத வண்ணம் செய்தலாகிய திருவிளையாட்டில் வல்லவராகிய மாறுபட்ட உருவங்களைக் கொள்ளும் விமலர் விரும்பிய பதி (யாதெனில்) படத்தையுடைய பாம்பின்

வாயில் உள்ள பற்களைப் போன்ற குரவமலர்கள் மிகுதியாக மலரவும், வயல்களில் உள்ள நீல மலர்களின் மொட்டுகள் விரிய அதனால் மணம் பரந்து வீசுதலையுடைய திருக்கொச்சைவயும் ஆகும்.

கையினில் உணவையேற்று உண்ணும் சமண குருமார்கள் நீராடாமையை மேற்கொண்டவர்களாகையால் அவர்கள் உடம்பினின்றும் அழுக்கு உதிரும். எனவே அவர்களை மேனி உதிர் மாசர் எனக் கூறினர். மாசர் — மாசு உடையவர், அதாவது அழுக்கு உடையவர்.

புறப்புறச் சமயத்தாராகிய சமணர்களும் புத்தர்களும் சிவபெருமானின் உண்மையை அறிய ஒண்ணாது செய்ததும் சிவன் விளையாட்டேயாம் என்பது முதலிரண்டடிகளின் கருத்தாகும்.

குரவ மரங்களின் மலர்கள் பாம்புகளின் பற்களைப் போன்ற தோற்றத்தினையுடையனவாய் இருக்கின்றன என்பது மூன்றாமடிகூறும் செய்தியாகும். வயல்களில் நீல மலர்கள் விரிதலால் எங்கும் மணம் பரந்து வீசுகின்றது என்பது நான்காமடியின் கருத்து. இத்தகைய திருக்கொச்சைவயமே சிவபெருமானின் பதியாகும் என்று கூறியதாகக் கொள்க.

இறைவனை ஒப்பிலாத ஒளிமேனி யானை
உலகங்கள் ஏழுமுடனே
மறைதரு வெள்ளமேவி வளர்கோயில் மன்னி
இனிதா இருந்தமணியைக்
குறைவில ஞானமேவு குளிர்பந்தன் வைத்த
தமிழ்மாலை பாடுமவர் போய்
அறைகழல் ஈசனாளும் நகர்மேவி என்றும்
அழகா விருப்பதறிவே. 11

திருச்சிற்றம்பலம்

11. இறைவனும், உவமையில்லாத பிரகாசத்தை உடைய திருமேனியுடையவனும், ஏழுலகங்களும் உடனே மறையும்படி எழுந்த ஊழிப்பிரளய வெள்ளத்தில் மறையாது வளர்ந்து ஓங்கிய கோயிலாகிய திருக்கொச்சைவயத்தில் இனிதாக எழுந்தருளியிருந்த மணியாம் சிவபெருமானை, குறைவு அற்றதான சிவஞானம் பொருந்திய தயை மிக்க திருஞானசம்பந்தன் பாடியமைத்த தமிழ் மாலையாகிய இப்பதிகத்தைப் பாடுகின்றவர்கள் ஒலிக்கின்ற வீரக்கழல் கலையுடைய ஈசனார் ஆளுகின்ற சிவலோகம் போய் அங்கு எக்காலத்தும் குன்றாத நலத்துடன் இருப்பார்கள் என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

'ஒப்பிலாத இறைவனை', 'ஒப்பிலாத ஒளிமேனியானை' என ஈரிடத்துங் கூட்டிப் பொருள் கொள்ளலுஞ் சிறப்புடையதே. உலகங்கள் ஏழுமுடனே மறைதரும் வெள்ளம் என்பது ஏழுஉலகங்களையும் ஒருங்கே மூடிய வெள்ளம். இது ஊழிப்பிரளயம் எனப்படும். இதில் சீகாழி மறையாது மிதந்தது என்பது தலபுராணத்தால் அறியப்படுகிறது.

மணி — ஒளி மேனி என்று கூறியதற்கேற்ப இறைவனை மணி எனக்கூறினது மணியினின்றும் ஒளி வீசுதலாலென்க.

குளிர்பந்தன் — தண்ணளி பொருந்திய சம்பந்தன். அதாவது தயாவெனும் ஈரம் உடைய சம்பந்தன் என்பதாம்,

அழகு — நலம் என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளுண்மையால் அழகு என்ற சொல்லுக்கு நலம் என்று பொருள் கொள்ளப்பட்டது.

அறிவே — அனைவரும் அறிந்த செய்தியே என்ற பொருளைத் தரும்.

குறிப்பு : இப்பதிகத்தின் ஏழாம் திருப்பாடல் சிதைந்து போய்க் கிடைக்காதாயிற்று

சிவம்

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவஜயம்

திருக்கொச்சைவயம்—2

(சீகாழி)

பண் : பியந்தைக்காந்தாரம்] [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அறையும் பூம்புனலோடும் ஆடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பில் பெண்ணொரு பாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி ஓவா மந்திர வேள்வி அறாத
குறைவில் அந்தணர் வாழுங் கொச்சை வயமமர்ந் தாரே. 1

பதிகப்பொழிப்புரை : 1 ஆடுகின்ற பாம்பினைத் தரித்த சடையின்மேல் ஒலிக்கின்ற அழகிய கங்கையோடு பிறைச் சந்திரனையுஞ் சூடுவர். தமது உடலில் பெண் ஒரு பாகம் இருத்தலை விரும்பினர். (இத்தகைய சிவபெருமான்) வேதங்களை ஓதுவதால் உண்டாகும் ஒலி ஓவாத, மந்திரங்களைக் கொண்டு செய்யும் வேள்விகளும் நீங்காத குறைபாடில்லாத அந்தணர்கள் வாழுந் திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தை விரும்பி வீற்றிருந்தார்.

குறைவு இல் அந்தணர் — வேதங்களை ஓதுவதிலும், யாகங்களை இயற்றுவதிலும் குறைபாடு இல்லாத அந்தணர் என்பதாம்.

சுண்ணத்தர் தோலொடு நூல்சேர் மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத்தர் வெங்கன லேந்திக் கங்குல்நின் றுடுவர் கேடில்
எண்ணத்தர் கேள்விநல் வேள்வி அறாதவர் மாலெரி யோம்பும்
வண்ணத்த அந்தணர் வாழுங் கொச்சை வயமமர்ந் தாரே. 2

2. சுண்ணம் போன்ற பொடியான திருநீற்றினைப் பூசுபவர், போர்த்திய யானைத்தோலோடு முப்புரிநூலும் சேர்ந்த மார்பினையுடையவர், நெருங்கிச் சூழ்ந்த பூதகணங் களையுடையவர், கொடிய கனல் ஏந்தி இரவில் நடனமாடு

வர், (இத்தகைய சிவபிரான்) பிறர்க்குக் கேடுசூழாத எண்ண முடையவர்களும், வேதங்களில் விதிக்கப்பட்ட நல்ல வேள்விகள் செய்வதினின்றும் நீங்காதவர்களும், பெருமை மிக்க எரியோம்புதலைச் செய்யும் பண்புடையவர்களுமாகிய அந்தணர் வாழுந் திருக்கொச்சைவயம் என்னும் இத் தலத்தை விரும்பி வீற்றிருந்தார்.

பூதக் கண்ணத்தர் — பூத கணத்தர். எதுகை நோக்கி ணகர மெய் விரிந்து 'கணத்தர்' என்பது 'கண்ணத்தர்' என்றாயிற்று.

கேள்வி — வேதம்; குரு சீட முறைபாகக் காதால் கேட்டே வேதம் பயிலப்படுதலின் வேதம் 'சுருதி' எனப் படும். தமிழில் கேள்வி எனப்படும்.

கேடில் எண்ணத்தர் — 'மறந்தும் பிறன் கேடு சூழற்க' என்ற திருவள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமானவர்.

வேள்விகள் குறிப்பிட்ட காலங்களில் செய்வது. எரி யோம்புதல் தினசரி செய்வது. எனவே இரண்டையும் ஒருங்கு குறிப்பிட்டருளினர். இரண்டும் வேதமந்திரங் களைக் கொண்டே செய்வனவாம்.

பாலை யன்னவெண் ணீறு பூசுவர் பல்சடை தாழ
மாலை யாடுவர் கீதம் மாமறை பாடுதல் மகிழ்வர்
வேலை மால்கடல் ஓதம் வெண்திரை கரைமிசை விளங்குங்
கோல மாமணி சிந்துங் கொச்சை வயமமர்ந் தாரே 3

3. பாலைப் போன்ற வெண்ணிறமுடைய திருநீறு பூசுவர், பல கூறுகளாகப் பின்னப்பட்ட சடைமுடிகள் தாழும்படி மாலை நேரங்களில் கூத்தாடுவர், கீதமாக இசைக்கின்ற சிறந்த வேதத்தைப் பாடுதலை மிகவும் விரும்பு பவர் (இத்தகைய பெருமை வாய்ந்த சிவபெருமான்) பெருமையுடைய கடலினின்றும் உண்டாகும் கடல் வெள்ளத்தின் அலைகள் கரையின் மீது விளங்குகின்ற அழகியு

உயர்ந்த இரத்தினங்களைச் சிந்துகின்ற திருக்கொச்சைவயம் என்னுமித்தலத்தை விரும்பி வீற்றிருந்தார்.

கீதம் மாமறை — வேதகானம், அதாவது வேதமந்திரங்களை இசையுடன் பாடுதல். இது சாமவேதம் எனக்கொள்க.

மாலை ஆடுதல் — சந்தியா காலங்களில் ஆடும் நடனம், பிரதோஷ நடனம் எனவும் வழங்கப்படும்.

கடிகொள் கூவிள மத்தங் கமழ்சடை நெடுமுடிக் கணிவர்
பொடிகள் பூசிய மார்பிற் புனைவர்நன் மங்கையொர் பங்கர்
கடிகொள் நீடொலி சங்கின் ஒலியொடு கலையொலி துதைந்து
கொடிகள் ஓங்கிய மாடக் கொச்சை வயமமர்ந் தாரே. 4

4. மணமுள்ள வில்வம், ஊமத்தம் இவைகளை மணம் வீசுகின்ற நீண்ட சடைமுடிக்கு அணிவர், திருநீறு பூசிய மார்பில் அணிவர், மங்கையாம் உமாதேவியாரை ஒரு பங்கிலே கொண்டவர் (இத்தகைய சிவபெருமான்) திருமணங்களின் மேளஒலி போன்ற ஒலியும் மற்றும் கோயில்கள் திருவிழாக்களில் ஒலிக்கும் சங்கின் ஒலியோடு கலைகளைப் பயில்வாரது ஒலியும் நெருங்கியதும், கொடிகள் ஓங்கிய மாடங்களையுடையதுமான திருக்கொச்சைவயம் என்னுமித்தலத்தை விரும்பி அமர்ந்தார்.

கூவிளம், மத்தம் முதலியவற்றைச் சடைமுடியில் அணிவதுடன் மார்பிலும் மாலையாகத் தரித்தனர் என்பதாம்.

கலையொலி — ஆடல் பாடல் முதலிய கலைகளைக் கற்பார் செய்யும் ஒலி. வேதம் முதலிய கலைகளைப் பயில்வாரது ஒலியுமாம். துதைந்து — நெருங்கி.

ஆடல் மாமதி உடையார் ஆயின பாரிடஞ் சூழ
வாடல் வெண்டலை யேந்தி வையகம் இடுபலிக் குழல்வார்
ஆடல் மாமட மஞ்ஞை அணிதிகழ் பேடையொ டாடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த கொச்சை வயமமர்ந் தாரே. 5

5. பிறைச் சந்திரனைத் தலையில் உடையவர், பூதகணங்களாயினவற்றால் எப்பொழுதும் சூழ்ந்திருக்கத் தசையற்ற தான ஒரு வெள் சலையோட்டினைக் கையிலேந்தி உலகத்தவர் இடுகின்ற பலிக்குத் திரிவார் (இத்தகைய சிவபெருமான்) ஆடுதலையுடைய பெருமையுடைய மடமயில்கள் அழகிய தமது பெடைகளோடு ஆடிக் கூடுகின்ற குளிர்ச்சி பொருந்திய பொழில்கள் சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்னும் இப்பதியில் விரும்பி அமர்ந்தார்.

பாரிடம் — பூதகணங்கள்; வையகம் — பூமி, ஆகுபெயராய் அதில் வாழ்வோரைக் குறித்தது.

உழலுதல் — அலைதல், திரிதல்.

மண்டு கங்கையும் அரவும் மல்கிய வளர்சடை தன்மேல்
துண்ட வெண்பிறை அணிவர் தொல்வரை வில்லது வாக
விண்ட தானவர் அரணம் வெவ்வழல் எரிகொள விடைமேல்
கொண்ட கோலம துடையார் கொச்சை வயமமர்ந் தாரே.6-7

6—7. மிக்குச் செல்லும் கங்கையும் பாம்பும் பொருந்திய வளர்சடை மீது வெண்மையான பிறைச் சந்திரனையும் அணிந்து கொள்வர். பழைமையான மேரு மலையே வில்லாக அசுரரது மதில்கள் எரிக்கு இரையாகும்படி எருதின் மீது கொண்ட திருக்கோலத்தினையுடையவர் (இத்தகைய சிவபிரான்) திருக்கொச்சைவயம் என்னுமித் தலத்தினை விரும்பி அமர்ந்திருந்தார்.

துண்டப்பிறை, வெண்பிறை என ஈரிடத்தும் கூட்டி உரைக்கலாம். தானவர் — அசுரர்; அரணம்—மதில், இங்கு அசுரரது நகரத்தைக் குறித்தது.

முப்புரம் எரிசெயச் சிவபெருமான் ஒரு இரதத்தில் ஏறிச் சென்றனர் என்று கூறப்படினும், அஃது அச்சு முறிய உடனே திருமால் இடபத்தின் வடிவெடுக்க, அதன் மீதிருந்து இறைவனார் முப்புரம் எரி செய்தார் என்றுங்

கூறப்படுதலால் "தானவர் அரணம் வெவ்வழல் எரிகொள விடைமேற் கொண்ட கோலமதுடையார்" எனக் கூறியருளினர்.

அன்றவ் ஆல்நிழல் அமர்ந்து அறவுரை நால்வர்க் கருளிப்
பொன்றி ஞர்தலை யோட்டில் உண்பது பொருகடல் இலங்கை
வென்றி வேந்தனை யொல்க ஊன்றிய விரலினர் வான்தோய்
குன்ற மன்னபொன் மாடக் கொச்சை வயமமர்ந் தாரே. 8

8. அன்று அந்த ஆலநிழலில் சனகாதி இருடியர் நால்வர்க்கு அறவுரை அருளியது, இறந்த பிரமதேவரது தலையில் பலியேற்று உண்பது ஆகிய செயல்களையுடைய வரும், கரையிலே மோதுதலையுடைய கடல் சூழ்ந்த இலங்கையின் வெற்றி வேந்தனை இராவணனை அவன் தளர்ச்சியடையும்படி ஊன்றிய திருவிரலையுடையவருமாகிய சிவபெருமான், வானத்தைத் தடவுகின்ற குன்றம் போன்று உயர்ந்தவையும், அழகியவையுமான மாடங்கள் நிறைந்த திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தை விரும்பி எழுந் தருளியிருந்தார்.

அன்று+அவ்+ஆல்நிழல் — 'அன்று' என்பது அற முரைத்த அந்த நாள் என்று பொருள் படும். பண்டறி சுட்டு என்பர். அவ்வால் நிழல் என்பதிலும் 'அ' பண்டறி சுட்டு ஆகும்.

பொன்றினர் தலை —பிரம கபாலம்.

சீர்கொள் மாமல ரானுஞ் செங்கண்மால் என்றிவ ரேத்த
ஏர்கொள் வெவ்வழ லாகி எங்கும் உறநிமிர்ந் தாரும்
பார்கொள் விண்ணழல் கால்நீர்ப் பண்பினர் பால்மொழி
யோடும்
சூர்கொள் வேல்வலன் ஏந்திக் கொச்சை வயமமர்ந் தாரே. 9

9. அழகும் பெருமையுமுடைய தாமரைமலரோனை பிரமதேவனும், சிவந்த கண்களையுடைய திருமாலும் என்ற இவர்கள் ஏத்தித்துதிக்கும்படி எழுச்சி மிக்க பேரழலாகி எங்கும் பரவி உயர்ந்தவரும், நிலம்-வான்-தீ-காற்று-நீர்

என்னும் ஐம்பெரும் பூதங்களின் தன்மைகளை உடையவரும், பால் போலும் இன்மொழியாளாகிய உமா தேவியாரோடு கூரிய மூவிலை வேல் (சூலாயுதம்) வலம் ஏந்தித் திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தில் அமர்ந்திருந்தார்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்கட்கும் முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்பன தன்மைகளாம். இறைவன் இவ்வைம்பெரும் பூதங்களையும் திருவுள்ளத்தால் தோற்றுவித்தலேயன்றி அவற்றை இயக்குதற்பொருட்டு அவற்றின் உள்ளும் புறமும் விரவி நிற்றலால் இவற்றின் பண்பினர் எனக் கூறியருளியதாகக் கொள்க. இறைவன் ஐம்பூதங்களின் பண்பினனாய் நிற்கும் முறையைப் பின்வரும் மணிவாசகப் பெருமானின் திருவாக்காலும் கண்டு கொள்க.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
—திருவாசகம்-போற்றித் திருவகவல்: **137-141**

குண்டர் வண்துவ ராடை போர்த்ததொர் கொள்கையி னார்கள்
மிண்டர் பேசிய பேச்சு மெய்யல மையணி கண்டன்
பண்டை நம்வினை தீர்க்கும் பண்பினர் ஒண்கொடி யோடும்
கொண்டல் சேர்மணி மாடக் கொச்சை வயமமர்ந் தாரே. 10

10. குண்டர்களாகிய சமணர்களும், மிகுதியாகத் துவர் ஊட்டப்பெற்ற ஆடைகளைப் போர்த்தலாகிய ஒரு கொள்கையினையுடையவர்களாகிய பௌத்தர்களுமாகிய மிண்டர்கள் பேசும் பேச்சுகள் உண்மையல்ல. (எனவே அவற்றைக் கொள்ளாது) கருநிறத்தை அணியாகக் கொண்ட கழுத்தையுடையவரும், நமது பழைய வினைகளை எல்லாம் தீர்த்தருளுதலையே தமது பண்பாகக் கொண்டவருமாகிய சிவபிரான் ஒளிமிக்க கொடி போல்வாளாகிய உமா

தேவியாரோடு மேகமளவும் உயர்ந்த அழகிய மாடங்கள் நிறைந்த திருக்கொச்சைவயத்தில் அமர்ந்திருந்தார் (அவரை வழிபட்டு உய்யுங்கள் என உலகிற்கு அறிவுறுத்தியது கண்டு கொள்க.)

மிண்டர்கள் — உடல் வலிமையுடையவர்கள்.

கொந்த ணிபொழில் சூழ்ந்த கொச்சை வயநகர் மேய
அந்த ணன்னடி யேத்தும் அருமறை ஞானசம் பந்தன்
சந்த மார்ந்தழ காய தண்டமிழ் மாலைவல் லோர்போய்
முந்தி வானவ ரோடும் புகவலர் முனைகெட வினையே. 11

திருச்சிற்றம்பலம்

11. பூங்கொத்துக்கள் அழகு செய்யும் பொழில்கள் சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்னும் இந்நகர் மேய அந்தணனாகிய சிவபிரானின் திருவடிகளைத் துதிக்கின்ற அருமறை ஞானசம்பந்தனது சந்தம் பொருந்திய அழகும் திருவருட்குளிர்ச்சியும் பொருந்திய இந்தத் தமிழ்மாலை ஓதவல்லார்கள் தங்களது வினைகள் கெட்டுப்போக (அதனால்) வானவரோடும் போய்ச்சேர வல்லவர்களாவார்கள்.

அந்தணன் — சிவபெருமான்; அறவாழி அந்தணன் என்பர் திருவள்ளுவர்.

அருமறைஞானசம்பந்தன் என்பது மறையின் அருமையும் அதனால் பெறும் ஞானமும் அந்த ஞானத்தோடு தமக்கு உள்ள சம்பந்தமும் உணர்த்தியதாம். பிள்ளையாரது பெயர்க் காரணமும் இதனால் புலப்படுவது காண்க.

முந்தி வானவர் — தேவர்களாக முன்னமேயே வானுலகத்து இருப்பவர்கள். இப்பதிகம் பாடவல்லவர்கள் தமது வினைகள் யாவும் கெடப்பெற்று அங்குச் செல்வார்கள் என்பதாம்.

குறிப்பு :—இப்பதிகத்தின் 7-ம் திருப்பாடல் சிதைந்து போய்க் கிடைக்காதாயிற்று.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருக்கொச்சைவயம்-3

(சீகாழி)

பண் : சாதாரி] திருவிராகம் [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருந்துமா களிற்றிள மருப்பொடு
திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடசமும்
பீலியுஞ் சுமந்து கொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட்
டாறுசூழ் கொச்சை மேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ்
நெஞ்சமே புகலதாமே. 1

பதிகப்பொழிப்புரை : 1. நெஞ்சமே! அழகான இளம் யானைத் தந்தங்களோடு திரட்சியான இரத்தினங்களையும், சந்தன மரங்களையும் அடித்துக்கொண்டு, குருந்து குரவம் குடசம் முதலிய மரவகைகளையும் மயிலின் தோகைகளையும் சுமந்துகொண்டு பரவி பெரிய வயல்களில் பாய்கின்ற நெடிய கரைகளையுடைய காவிரி நதி சூழும் திருக்கொச்சை வயம் என்னுமித்தலத்தை விரும்பித் தங்கியருளிய சிவ பெருமானது அழகிய திருவடிகளைப் போற்றி வாழ்வாயாக. அத்திருவடிகளே நமக்குச் சரண்புகும் இடமாகும்.

ஈசனாரது திருவடிகளே நமக்குப் புகல் என்று தம் நெஞ்சிற்கறிவுறுத்து முகத்தான் உலகர்க்கு ஆசாரியர் உணர்த்தியருளியவாறு கண்டு கொள்க.

களிறு — யானை; மருப்பு — தந்தம்; சந்தம் — சந்தன மரம்; நீடு கோட்டாறு — நெடிய கரைகளையுடைய ஆறு அல்லது வளைந்து செல்லுதலையுடைய ஆறு. இங்குக் காவிரி நதியைக் குறித்தது. பின்வரும் பாடல்களிலும் கோட்டாறு என்பதற்குக் காவிரி என்றே பொருள் கொள்க. கோடு — கரை.

குருந்து — ஒரு வகை மரம், காட்டு நாரத்தை காட்டு எலுமிச்சை என்ற பொருள்கள் அகராதியில் காணப்படுகிறது.

குரவம் — குரவமரம், ஒரு வகை மரம். பேரீந்து எனவும் பொருள் காணப்படுகிறது

குடசம் — மலை மல்லிகை, வெட்பாலை மரம் என்றும் பொருள் உள்ளது.

ஏலமா ரிலவமோ டினமலர்த்
 தொகுதியா யெங்குநுந்திக்
கோலமா மிளகொடு கொழுங்கனி
 கொன்றையுங் கொண்டுகோட்டா(று)
ஆலியா வயல்புகு மணிதரு
 கொச்சையே நச்சிமேவும்
நீலமார் கண்டனை நினைமட
 நெஞ்சமே யஞ்சனீயே. 2

2. மட நெஞ்சமே! ஏலம், சாதிக்காய் இவைகளோடு ஒரே இனமான மலர்த்தொகுதிகளாய் எங்கும் தள்ளிக் கொண்டு, அழகிய மிளகுக் கொடிகளோடு கொழுவிய கனிகள் கொன்றை மரங்கள் இவற்றையெல்லாங் கொண்டு ஆரவாரத்துடன் காவிரி நதியின் நீர் வயல்களில் புகுகின்ற அழகிய திருக்கொச்சைவயம் என்னுமித்தலத்தை விரும்பி எழுந்தருளிய நீல நிறம் பொருந்திய கழுத்தையுடைய சிவபிரானை நினைப்பாயாக. நீ அஞ்ச வேண்டாம்.

நீலகண்டம் அஞ்சியோடிய தேவர்களைக் காத்தருளிய சின்னமாகையால் அது உன்னையும் காக்கும். எனவே அக்கண்டத்தையுடைய பெருமானை நினைப்பாய். நீ அஞ்சுதல் தவிர்ப்பாய் என்று தன் நெஞ்சிற்கறிவுறுத்துமுகத்தான் உலகர்க்கு அறிவுறுத்திய திறம் கண்டு கொள்க. பின் வருமிடங்களிலெல்லாம் இங்ஙனமே கொள்க.

இலவம் என்பதற்கு ஒரு வகை பஞ்சமரம் என்ற பொருள் உளதேனும் ஏலம் என்ற இனம்பற்றிச் சாதிக்காய் என்ற பொருள் கொள்ளப்பட்டது.

நுந்தி — தள்ளிக் கொண்டு; ஆலியா—ஆரவாரித்து நச்சி—விரும்பி. அஞ்சனீயே—அஞ்சல் நீயே; நீ அஞ்சாதே என்பதாம், பின் இம்மாதிரி வருமிடங்களில் எல்லாம் இப்படியே கொள்க.

பொன்னுமா மணிகொழித் தெறிபுனற்
கரைகள்வாய் நுரைகளுந்திக்
கன்னிமார் முலைநலங் கவரவந்
தேறுகோட் டாறுசூழ
மன்னினார் மாதொடும் மருவிடங்
கொச்சையே மருவினாலும்
முன்னைநோய் தொடருமா றில்லைகா(ண்)
நெஞ்சமே யஞ்சனீயே. 3

3. நெஞ்சமே! கரைகளிடத்தில் பொன்னும் பெருமையுடைய மணிகளையும் ஒதுக்கி எறிகின்ற ஆற்றுநீர் நுரைகளைத் தள்ளிக்கொண்டு நீராடுகின்ற பெண்களின் முலைநலம் கவர வந்தேறுகின்ற காவிரி சூழ்ந்திருக்க உமாதேவியாரோடு நிலைபெற்று இருப்பவராகிய சிவபிரான் பொருந்திய இடமாகிய திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தையே எக்காலத்தும் பொருந்தி வாழ்வாயாக. (அம்மாதிரி வாழ) உனது தொன்று தொட்டு வருகின்ற மலநோயானது இனி உன்னைத் தொடருமாறு இல்லை. அச்சத்தை நீ ஒழிப்பாயாக.

கொழித்து எறிதல்— பொன்னையும் மணியையும் வெள்ளம் ஒதுக்குதலைக் குறித்தது. கரைகள் வாய்—கரைகளிடத்தில், வாய் இங்கு இடம் என்னும் பொருளில் வந்தது.

கன்னிமார் முலைநலம் கவர்தல் — கன்னிப் பெண்கள் நீராடும் போது அவர்களது மார்பில் பூசியிருந்த சந்தனம்

முதலிய வாசனைத் திரவியங்களை ஆற்றுநீர் அகற்றி விடுவதை முலைநலம் கவர்தல் என குறிப்பிட்டதாகக் கொள்க.

மாதொடும் மன்னினுர் மருவிடங் கொச்சையே நாளும் மருவி (வாழ) முன்னை நோய் தொடருமாறில்லை எனப் பொருள் காண்க.

கந்தமார் கேதகைச் சந்தனக்
காடுசூழ் கதலிமாடே
வந்துமா வள்ளையின் பவரளிக்
குவளையைச் சாடியோடக்
கொந்துவார் குழலினுர் குதிகொள்கோட்
டாறுசூழ் கொச்சைமேய
எந்தையா ரடிநினைந் துய்யலாம்
நெஞ்சமே யஞ்சனீயே. 4

4. நெஞ்சமே! மணம் பொருந்திய தாழை, சந்தன மரம் ஆகிய காடுகளைச் சூழ்ந்து, வாழைத் தோட்டங்களின் பக்கமாக வந்து, வள்ளைக் கொடியின் அடர்ந்த புதரையும் வண்டுகள் மொய்த்தலையுடைய குவளையையும் மோதி ஓடுதலைச் செய்து, பூங்கொத்துக்கள் அணிந்த நீண்ட கூந்தலையுடைய பெண்கள் குதித்துக் கொண்டு நீராடுதலை உடைய காவிரி நதி சூழ்ந்த திருக்கொச்சைவயத்தை விரும்பி எழுந்தருளிய எமது தந்தையாரான சிவபிரானது திருவடிகளைத் தியானித்து நாம் (துன்பம் நீங்கி இன்பமாக) வாழலாம். நீ அஞ்ச வேண்டாம்.

கேதகை — தாழை; கதலி மாடு — வாழையின் பக்கம்.

வள்ளையின் பவர்—வள்ளையின் அடர்ந்த படர் கொடி.

அளி — வண்டுகள். சாடி — மோதி.

கொந்து—பூங்கொத்து. குதி கொள்—குதித்தல், இங்கு நீராடலைக் குறித்தது.

மறைகொளும் திறலினு ராகுதிப்
புகைகள்வா னண்டமிண்டிச்
சிறைகொளும் புனலணி செழும்பதி
திகழ்மதிற் கொச்சைதன்பால்
உறைவிட மெனமன மதுகொளும்
பிரமனுர் சிரமறுத்த
இறைவன தடியிணை யிறைஞ்சிவாழ்
நெஞ்சமே யஞ்சலீயே. 5

5. நெஞ்சமே! வேதங்களில் கூறப்பட்ட உண்மைகளை அறிந்து கொள்ளும் திறல் உடையவர்களான அந்தணுளர்கள் இயற்றுகின்ற வேள்விகளின் புகைகள் ஆகாயத்தை அளாவி நெருங்குதலால் (மழைபொழிய) கரைகளைக் கொள்ளுகின்ற நீர் நிலைகள் அழகு செய்கின்ற செழும்பதியாகிய மதில்கள் விளங்குகின்ற திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தினிடம் தனது உறைவிடம் இது என மனமது கொள்ளும் பிரமனுர் சிரமறுத்த இறைவரது இரண்டு திருவடிகளையும் வணங்கி வாழ்வாயாக. (துன்பங்களைக் கண்டு) நீ அஞ்சல் வேண்டாம்.

மறை கொள்ளும் திறல் — வேதங்களை அத்தியயனம் செய்து அவற்றின் பொருளையும் உணர்ந்து அவற்றில் 'செய்' என விதிக்கப்பட்ட வேள்விகளை இயற்றுதல், 'கற்றுங்கு எரியோம்பி' என் முன்னர் கோயில் திருப்பதிகத்திலும் கூறியது காண்க.

ஆகுதி — வேள்விகளில் சொரியப்படும் நெய், மற்றும் 'அவி' எனவும் பெயர் பெறும் வேள்விப் பொருள்கள். இங்கு வேள்வியையே குறித்தது.

திருக்கொச்சைவயம் என்ருெரு பெயர் படைத்த சீகாழிப்பதியில் அந்தணர்கள் மறைகளை ஓதியுணர்ந்து அவற்றில் விதித்தபடி வேள்விகளைச் செய்கிருர்கள். வேள்விப் புகை மேலேயெழும்பி வானத்தை அளாவுகிறது. வேள்வியின் பயனுக மழை பொழிகின்றது. மழைநீர் கரைகளை

உடைய நீர் நிலைகளில் தங்குகிறது. அத்தகைய நீர் நிலைகள் அழகு செய்கின்ற செழும்பதி திருக்கொச்சைவயம் என்ப தாம். மேலும் இப்பதியை மதில்கள் சூழ்ந்து இருக்கின்றன. இத்தகைய பதியைத் தனது இருப்பிடமாகக் கொள்ள இறைவன் மனங் கொண்டனன். அவ்விறைவன் பிரமனூர் சிரங்கொய்த பெரு வீரம் உடையவன். அத்தகைய பெரு மானது திருவடிகளைத் துதிப்பவர்க்கு அச்சம் ஏது? எனவே அவற்றை ஏத்தி வாழ்வாயாக. நீ எதற்கும் அஞ்சவேண் டாம் என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தியருளியதே இப்பாட லின் திரண்ட பொருளாகும். பிரமனூர் சிரம் அறுத்த இறைவற்கு உன் துன்பத்தைப் போக்குதல் ஒரு பெரிய காரியமா? எனக்குறிப்பாகக் கூறியதும் காண்க.

சிறை — இச்சொல்லுக்கு 'நீர்க்கரை' என்றொரு பொருள் காணப்பட்டதால் 'கரை' எனப் பொருள் கொள்ளப்பட்டது.

இறைவன் என்னும் சொல்லை, 'உறைவிடமென மனம் அது கொளும் இறைவன்' எனவும் 'பிரமனூர் சிரம் அறுத்த இறைவன்' எனவும் ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ளு தல் சிறக்கும்,

அந்தணர் ஆகுதியின் பயனாய் மழை தவறாது பெய்தது என்பதையும் இத்திருப்பாடல் குறிப்பாகச் சுட்டிக் காட்டு கின்றது.

சுற்றமு மக்களுந் தொக்கவத்
    தக்கனைச் சாடியன்றே
உற்றமால் வரையுமை நங்கையைப்
    பங்கமா வுள்கினனோர்
குற்றமில் லடியவர் குழுமிய
    வீதிசூழ் கொச்சைமேவி
நற்றவ மருள்புரி நம்பனை
    நம்பிடாய் நாளுநெஞ்சே. 6

6. நெஞ்சமே! சுற்றத்தாரோடு மக்களும் ஒருங்கே கூடியழிய தக்கனது வேள்வியையும் அவனையும் அன்றே அழித்து, இமயமலையின் மகளான உமாதேவியார் ஒரு பாக மாக இருக்கும்படி நினைத்தவனும், ஒரு குற்றமுமில்லாத அடியவர்கள் கூடிய வீதிகள் சூழ்ந்த திருக்கொச்சைவயம் என்னுமித்தலத்தில் விரும்பியிருந்து நல்லதவமியற்றினவர் களுக்கு அதன் பயனை அளித்தருளும் நம்பனுகிய நமது பெருமானை எந்நாளும் நீ நம்பி வாழ்வாயாக. (நம்பினோர் கைவிடப்படார் என்று கூறியதாம்.)

தக்கன் வேள்வியை அழித்தஞான்றே, தேவியார் இமயமலையரசன் மகளாவதற்கும் பின்னர் அவ்வம்மையைத் தமது இடது பாகத்தேயிருத்திக் கொள்வதற்கும் நினைத்து அருளியவன் என்பது இரண்டாமடியின் கருத்தாகக் கொள்க.

நல்+தவம் — நற்றவம், இங்கு தவத்தின் பயனைக் குறித்தது.

நம்பன் — விரும்புதற்குரியவன். நம்பி சரண் அடையத் தக்கவன் எனலுமாம்.

தக்கன் வேள்வி அழிவுண்டதன் விரிவு கந்தபுராணம்' தட்சகாண்டத்தில் காண்க.

கொண்டலார் வந்திடக் கோலவார்
　　பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா
　　முகிறனைக் கதுவுகொச்சை
அண்டவா னவர்களு மமரரு
　　முனிவரும் பணியவாலம்
உண்டமா கண்டனார் தம்மையே
　　யுள்குநீ யஞ்சனெஞ்சே. 7

7. நெஞ்சமே! மேகங்கள் வந்தவுடனே அழகிய நீண்ட பொழில்களில் குரங்குகள் கூடிக்கொண்டு தங்கட்கு

முன் காணப்படுகின்ற நீண்ட மூங்கில் மரங்களைப் பிடித்து ஏறி அந்தக் கரிய மேகங்களைக் கையால் பற்றுகின்ற திருக் கொச்சைவயத்தில் எழுந்தருளிய தேவர்களும் அண்ட வானவர்களும் வந்து பணிய ஆலகால விடத்தினையுண்டு (அவர்களைக் காத்த) பெருமையுடைய கழுத்தினையுடைய சிவபெருமானையே நீ எப்பொழுதும் நினைப்பாயாக. (தேவர் துயர் நீக்கியது போல உன் துயரையும் நீக்குவர் என்று குறிப்பாகக் கூறியதாம்.)

கொண்டல் — மேகம்; கொண்டலார் என்றது சிறப்பு நோக்கியாம். முகில்—மேகம். கழை—மூங்கில்; உள்குதல்— நினைத்தல், தியானித்தல் என்னும் பொருளது.

மேகங்கள் படிந்தவுடன் குரங்குகள் மூங்கில் ஏறி மேகங்களைக் கையால் பற்றுகின்றன என்பது ஒரு அழகிய கற்பனை. குரங்குகளும் மூங்கிலைப் பற்றி வானளாவ ஓங்கும் போது மக்கள் இறைவனைப் பற்றினால் ஓங்கி வளர்வர் என்பதில் ஐயம் உண்டோ? என்பது குறிப்பாகக் காட்டப் பட்ட உள்ளுறை பொருளாகக் கொள்க.

மா முகில் — 'மா' என்னும் சொற்கு கருமை என்னும் பொருள் உண்மையால் கரிய மேகம் எனக் கொள்ளப் பட்டது.

மா கண்டனூர் என்றவிடத்தும் கரிய கண்டர் (கழுத் தையுடையவர்) எனக் கொள்ளுதலும் சிறப்புடைத்தாம்.

அடலெயிற் றரக்கனூர் நெருக்கிமா
　　மலையெடுத் தார்த்தவாய்கள்
உடல்கெடத் திருவிர லூன்றினு
　　ருறைவிட மொளிகொள்வெள்ளி
மடலிடைப் பவளமு முத்தமுந்
　　தொத்துவண் புன்னைமாடே
பெடையொடுங் குருகினம் பெருகுதண்
　　கொச்சையே பேணுநெஞ்சே. 8

8. நெஞ்சமே! வலிய பற்களையுடைய அரக்கனாகிய இராவணன் பெரிய திருக்கயிலாய மலையைப் பெயர்த்தெடுத்தலைச் செய்ய ஆரவாரித்த வாய்களுடன் அவனது உடலும் நொறுங்கத் தனது திருவிரலை ஊன்றினவனாகிய சிவபிரானது உறைவிடமாகிய ஒளியுடைய வெள்ளியைப் போன்ற மடல்களையுடைய பூக்களின் இடையிடையே பவளம் போன்ற பூக்களும் முத்துப் போன்ற அரும்புகளும், பூங்கொத்துக்களையுமுடைய வளமையுடைய புன்னை மரங்களின் பக்கத்தில் பறவை இனங்கள் தங்களது பெடைகளோடு வளர்தலையுடைய திருக்கொச்சைவயம் என்னும் இத்தலத்தையே நீ பேணுதல் செய்து வாழ்வாய்.

அரக்கனார் — இகழ்ச்சிக் குறிப்பு.

பெடையொடும் குருகினம் மகிழ்ச்சி பெருக வளர்தலைப் போலத் திருக்கொச்சைவயம் மேவிய பெருமானைப் பேணுபவர்களும் தாமும் சுற்றமொடு இனிது வாழ்வர் என்றதொரு உள்ளுறை பொருளும் காண்க.

வெள்ளிமடல் — வெண்மையான இதழ்கள் கொண்ட பூக்கள்.

பவளம் — பவள நிறம் வாய்ந்த பூக்கள், முத்தம் — முத்துப் போன்ற நிறமுடைய வடிவுடைய மொட்டுகள் எனக் கொள்க.

இங்ஙனம் பலவிதப் பூக்கள் மலிந்த பொழில்களில் பூங்கொத்துக்களையுடைய புன்னைமர நீழலில் பறவையினம் பெடையோடுங் குலாவி வாழ்கின்றன என்பதாம்.

பேணுதல் — பாதுகாத்தல், மதித்தல், விரும்புதல் என்பனவாகிய பொருள்களையுடைய இச்சொல் திருமுறைகளில் பக்தி செய்தல், இடைவிடாது தியானித்தல் போன்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரவினில் துயில்தரு மரியுநற்
பிரமனு மன்றயர்ந்து
குலரகழ றிருமுடி யளவிட
வரியவர் கொங்கு செம்பொன்
விரிபொழி லிடைமிகு மலைமகள்
மகிழ்தர வீற்றிருந்த
கரியநன் மிடறுடைக் கடவுளார்
கொச்சையே கருதுநெஞ்சே. 9

9. நெஞ்சமே! பாம்புப் படுக்கையில் துயிலும் திருமாலும் நல்ல பிரமதேவனும் சோர்வடைந்து ஒலிக்கின்ற வீர கண்டையை அணிந்த திருவடியையும் திருமுடியையும் அளவிடுதற்கு அரியவரும், மகரந்தமானது பூக்களினின்றும் செம்பொன்துகளைப் போல உதிர்தலையுடைய பொழிலின் இடை மலைமகளான உமா தேவியார் மிகவும் மகிழும்படி கரியதும் (அகனல்) அழகுடையதுமான கழுத்தினையுடைய கடவுளும் ஆகிய சிவபிரான் வீற்றிருந்த திருக்கொச்சை வயம் என்னுமித்தலத்தையே நீ எப்பொழுதும் கருத்தில் கொள்வாய்.

கொங்கு — பூந்தாதுக்கள், இவை பொன்னிறமாக இருந்தமையால் கொங்கு செம்பொன் விரி பொழில் எனக் கூறியருளினர்.

கடுமலி யுடலுடை யமணருங்
கஞ்சியுண் சாக்கியரும்
இடுமற வுரைதனை யிகழ்பவர்
கருதுநம் மீசர்வானோர்
நடுவுறை நம்பனை நான்மறை
யவர்பணிந் தேத்தஞாலம்
உடையவன் கொச்சையே யுள்கிவாழ்
நெஞ்சமே யஞ்சனீயே 10

10. நெஞ்சமே! கடுக்காய்களைத் தின்னுதலையுடைய சமணர்களும், கஞ்சி உணவை உண்கின்ற பௌத்தர்களும்

சொல்லுகின்ற அவர்களது அறவுரைகளை இகழ்ந்து அவைகளைக் கொள்ளாத அடியவர்கள் நினைந்து ஏத்தும் நம் ஈசனும், தேவர்கள் நடுவிலே அவர்கள் தொழும்படி எழுந்தருளிய நம்பனும், நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்தவர் பணிந்தேத்தும்படி இந்த உலகம் முழுவதையும் தனக்கு உடைமைப் பொருளாக உடையவனுமாகிய சிவபெருமானது திருக்கொச்சைவயம் என்னும் இத்திருப்பதியையே தியானித்து நல்வாழ்வு வாழ்வாயாக. நீ அஞ்சுதலைத் தவிர்ப்பாயாக.

கடுமலி உடல் — சமணர்கள் கடுக்காய் முதலிய துவர்க்காய்களை உண்ணும் வழக்கமுடையவர்கள். எனவே அவர்களது உடலை கடுமலி உடல் எனக்கூறினர் இவ்வாறின்றி, வெறுக்கத் தக்க துர்நாற்றம் மிக்க உடலையுடைய சமணர் என்பர் திருத்தருமையாதீனக் குறிப்புரை ஆசிரியர். இது நீராடாமையால் விளைந்ததெனக் கொள்க.

புத்தர்களும் சமணர்களைப் போலவே கடுக்காய், சுக்கு போன்றவைகளை உண்பர் என்றும் அவர்கள் மீதூண் விருப்பினராகலின் தங்களது பெருந்தீனி சீரணித்தற் பொருட்டு இவைகளைத் தின்பர் என்றும் கூறப்படுகிறது. (இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் உதவிய குறிப்பு)

அறவுரை இகழ்பவர் — சிவனடியார்கள் புறப்புறச்சமயிகளாகிய சமணர், பௌத்தர் ஆகியோரது சமய போதனைகளை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார் என்பதாம்.

வானோர் நடுவுறை நம்பன் — தேவர்களின் நடுவே நாயகமாக அவர்கள் பணிந்தேத்துமாறு இறைவர் எழுந்தருளுவர் என்பதாம்.

ஞாலம் உடையவர் —"தானலாது உலகமில்லை, சகமலாது அடிமையில்லை", "உலகலாது உடையதில்லை" (அப்பர் சுவாமிகள்). "எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே" (தாயுமானவ சுவாமிகள்.)

காய்ந்துதங் காலினாற் காலனைச்
　　செற்றவர் கடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண் டிடமென விருந்தநல்
　　லடிகளை யாதரித்தே
ஏய்ந்ததொல் புகழ்மிகு மெழில்மறை
　　ஞானசம் பந்தன்சொன்ன
வாய்ந்தவிம் மாலைகள் வல்லவர்
　　நல்லவா னுலகின்மேலே. 11

திருச்சிற்றம்பலம்

11. காவலையுடைய திருக்கொச்சைவயத்தினையே தாம் உறைவதற்கேற்ற இடமென ஆராய்ந்து அங்ஙனமே கொண்டு எழுந்தருளியிருந்த, காலனைக் காய்ந்து காலினாற் செற்றவராகிய நமது தலைவராகிய சிவபிரானை அன்பு செய்து, பொருந்திய தொன்மையான புகழ் மிகும் எழில் மறைஞானசம்பந்தன் துதித்துப் பாடிய சிறப்புடைய இத் தமிழ் மாலைகள் ஓதவல்லவர்கள் நன்மையுடையதான வானுலகின் மேலே வீற்றிருப்பர். (வீற்றிருப்பர் என்னும் சொல் வருவித்து உரைக்கப்பட்டது.)

கடிகொள் — காவல் அதாவது மதில்களையுடையது என்பதாம்

ஆதரித்தல் — அன்பு செய்தல் என்ற பொருளில் வந்தது. இறைவனிடம் அன்பு செலுத்துதல் என்பது பத்தியாகலின் பக்திசெய்து எனப் பொருள்படும்.

வாய்த்தல் — பொருந்தல், கிட்டுதல், சிறத்தல்,

திருக்கொச்சைவயத்தினை தமது உறைவிடமாகத் தேர்ந்து எழுந்தருளியிருந்த அடிகளைத் திருஞானசம்பந்தன் அன்புடன் துதித்துப் பாடிய இத்தமிழ்மாலை வல்லவர்கள் நல்ல வானுலகின் மேல் இருப்பவராவர் என்பதாம். மேல் என்பதற்கு மேன்மையுடையவராவர் என்ற பொருள் கொண்டு உரைப்பர் திருத்தருமபுரக் குறிப்புரை ஆசிரியர்.

சிவம்,

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருச்சண்பைநகர்-1

(சீகாழி)

பதிக வரலாறு: சீகாழிக்குரிய வரலாறு தெரியாத திருப்பதிகங்களில் திருச்சண்பைநகர் என்ற பெயரில் பாடியவை இதுவும் இதனையடுத்து வரும் பதிகமும் ஆகும்.

துருவாச முனிவர் சாபத்தால் சண்பைக்காடு ஒன்று தோன்ற, அப்புல்லையே ஆயுதமாகக் கொண்டு யாதவ குமாரர் போர் செய்து மடிய, அப்பழி நீங்கத்துருவாசர் பூசித்துப் பேறு பெற்றமையால் சண்பைநகர் என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பண் : தக்கேசி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

பங்கமேறு மதிசேர் சடையார் விடையார்பலவேதம்
அங்கமாறும் மறைநான்கவையு மானார்மீனாரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர் மனைக்கேறுனைமுக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பைநகராரே. 1

பதிகப்பொழிப்புரை: 1. கூனல் உடைய பிறைச் சந்திரன் சேர்ந்த சடையினையுடையவரும், விடையினை உடையவரும், பல வேதங்களும், ஆறு அங்கங்களும் நான்கு மறைகளான அவையுமானவருமான சிவபெருமான், மீன்கள் நிறைந்ததும் மரக்கலங்கள் மேவுகின்றதுமான கடலில் வாழ்கின்ற பரதவர்களது வீடுகளுக்கு ஏறி கூரிய மூக்கினை உடைய சங்கங்கள் முத்துக்களை ஈனுகின்ற திருச்சண்பை நகரில் எழுந்தருளியவராவார்.

பங்கம் — கூனல். பிறைச் சந்திரன் வளைந்த வடிவாயிருப்பதால் கூனல் பிறையென்றார். விடையார் — எருதினை ஊர்தியாக உடையவர்.

பலவேதம் — வேதங்கள் அளவற்றன எனக் கூறப்படுகிறது. 'அனந்தாவை வேதா:' என்று கூறுவர். எனவே

பலவேதம் ஆனார் என்று கூறினார். வேத அங்கங்கள் ஆறும் ஆனார் என்பதை அங்கமாறும் எனக் குறிப்பிட்டு அருளினார். சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தோபிசிதம், சோதிடம் இவையே வேதாங்கங்கள் எனப் படும். இவைகளின் விவரம் முன்னர்க் கூறப்பட்டுள்ளதும் காண்க. (த. மா. 7, பக்கம் 62-63)

மறை நான்கு—வேதம் அளவிறந்தனவாயினும், நான்கு என்றும் கூறப்படுதலின் அந்நான்கு மறைகளுமாயினார் என்று கூறினார்.

கடல் வாழ் பரதர்—கடற்கரையில் வாழ்கின்ற செம்படவர்கள் அல்லது மீன் பிடித்தலை மேற்கொண்டு தமது நேரம் முழுதும் கடலிலேயே கழிப்பவராகலின் அங்ஙனம் கூறியதாகவும் கொள்க.

சங்குகள் கடற்கரையில் உள்ள செம்படவர்களின் மனைக்கு ஏறிச் சென்று அங்கு முத்துக்களைத் தோற்றுவிக்கும் சண்பைநகர் என்பதாம்.

சூதகஞ்சேர் கொங்கையாளோர் பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனார் பூதகணநாதர்
மேதகஞ்சேர் மேகமந்தண் சோலையில் விண்ணார்ந்த
சாதகஞ்சேர் பாளைநீர்சேர் சண்பைநகராரே. 2

2. சூதாடும் காயையொத்த கொங்கைகளையுடைய உமாதேவியாரை ஒரு பங்கிலே கொண்டவரும், ஒளிவிடும் செந்தாமரையில் எழுந்தருளியுள்ள புண்ணியரும், பூதகணங்களுக்குத் தலைவருமான சிவபெருமான், மேன்மையுடைய மேகம் சூழ்ந்து குளிர்ச்சி பொருந்திய சோலைகளில் விண்ணினின்றும் பொழியும் மழை நீரையுண்ணுகின்ற சாதகப்புள் சேர்தலையுடையதும், தென்னை கமுகு முதலிய மரங்களின் பாளைகளில் தேன் சேர்தலையுடையதுமான திருச்சண்பைநகர் கோயில் கொண்டவராவர்.

செங்கமலப் போதில் வீற்றிருக்கும் புண்ணியனர்-பக்தர் களின் இருதயம் என்ற தாமரையில் வீற்றிருக்கும் புண்ணிய வடிவர் என்று கூறியதாகக் கொள்க.

விண் — ஆகு பெயரால் அதனின்றும் பொழியும் நீரைக் குறித்தது. சாதகப்புள் மழைநீரையே அருந்தி வாழுமாதலின் விண்ணுூர்ந்த சாதகப்புள் என்று கூறினர்.

மகரத்தாடு கொடியோனுடலம் பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய் நீலகண்டனர்
பகரத்தாரா வன்னம்பகன்றில் பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர் சண்பைநகராரே. 3

3. மகரமீனைக் கொடியாகக் கொண்ட மன்மத னுடைய உடலம் பொடியாகும்படிச் செய்து அவனுடைய ஒப்பில்லாத தேவியான இரதிக்கு அருள் செய்த நீல கண்டத்தையுடைய சிவபெருமான், தாரா, அன்னம், அன்றில் முதலாகச் சொல்லப்படுகிற பறவையினங்களும் திருவடிகளைப் பணிந்துஏத்த, தகரமும் புன்னையும் தாழை யும் சேர்ந்த பொழில்கள் சூழ்ந்த திருச்சண்பைநகரைக் கோயிலாகக் கொண்டவர் ஆவர்.

மகரக் கொடியோன் — மன்மதன். அவனை எரித்த பின்னர் அவன் மனைவியான இரதி தேவியானவள் பணிந்து குறையிரப்ப அவளுக்கிரங்கிப் பார்வதியின் திருமணத்தில் அவனை உயிர்ப்பித்தருளுவதாக வரமளித்ததையே அவனுடைய நிகரொப்பில் தேவிக்கருள் செய்த நீலகண்டனர் எனக் குறிப்பிட்டருளினர். விரிவு கந்தபுராணம் உற் பத்திக் காண்டத்தில் காண்க.

கொடியோன் — கொடியை உடையவன்; யோகத்தி லிருந்த சிவபெருமான் மீது அம்பு எய்யும் கொடிய எண் ணத்துடன் அவர் திருமுன்பு சென்றனனுதலில் அவன் கொடியோன் எனப்படுதலும் பொருந்துவது காண்க.

நாரா — ஒரு பறவை. சிறு நாரை என்பர். பறவைகளும் ஈசனைப் பணித்தேத்தும் பதி திருச்சண்பை நகர் என்பதாம். மனிதர்கள் பணிந்தேத்துவர் என்பது கூறவும் வேண்டுமோ?

தகரம் — தகர மரங்கள் (ஒரு வகை மரம்).

மொய்வல்லசுரர் தேவர்கடைந்த முழுநஞ்சதுவுண்ட
தெய்வர்செய்ய வுருவர்கரிய கண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியின் உரியர்காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ் சண்பைநகராரே. 4

4. போர் செய்தலில் வல்ல அசுரர்களும் தேவர்களும் (பாற்கடலைக்) கடைந்த பொழுது உண்டான விடத்தினை உண்ட தெய்வரும், சிவந்த திருமேனியுடையவரும், கறுத்த கழுத்தினையுடையவரும், மழுவாயுதம் விளங்குகின்ற கையினையுடையவரும், கட்டங்கம் என்னும் ஆயுதத்தினையுடையவரும், யானையின் உரித்த தோலைப் போர்த்தவரும் ஆகிய சிவபெருமான், சைவர்களும் பாசுபதர்கள் எனப்படும் சைவப் பிரிவினரும் அன்புடன் வணங்குகின்ற திருச்சண்பைநகரைக் கோயிலாகக் கொண்ட பெருமானவர்.

மொய் — போர்க்களம், போர் முதலிய பொருள்களைத் தரும் சொல்.

சுத்தி — மழுவைக் குறித்தது; கட்டங்கம்—இது பற்றி 12-ம் தமிழ் மாலையில் ஸமர்ப்பணப் பகுதியில் கூறியது இங்கு கொள்ளுதற்குரியது.

நஞ்சமுது செய்த தெய்வர் முதல் கரியின் உரியர் ஈறாகச் சொல்லப்பட்ட பெருமைகளையுடையவர் சண்பை நகரில் எழுந்தருளிய பெருமானேயாவர் என்பது கருத்து.

கலமார்கடலுள் விடமுண்டமரர்க் கமுதம் அருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய கொல்லையெருதேறி
நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாநறும்பாளை
சலமார்கரியின் மருப்புக் காட்டுஞ் சண்பைநகராரே. 5

5. மரக்கலங்கள் நிறைந்த கடல் விடத்தினைத் தானுண்டு தேவர்களுக்கு அமுதத்தினை அருள் செய்தவரும், அழகு பொருந்திய திருக்கயிலை மலையினையுடையவரும், முல்லை நிலத்துக் கடவுளாகிய திருமாலாம் இடபத்தின் மேல் ஏறிய பெருமானுமாகிய சிவபெருமான், அழகு பொருந்திய தென்னையின் வெண்மையான விரியாத நறும் பாளையானது யானையினது தந்தம் போலக் காட்டும் திருச் சண்பைநகரார் ஆவர்.

கலமார் கடல் — கலமார் என்பது கடலுக்குச் சாதி யடை. பாற்கடலில் கப்பல்கள் இல்லையெனினும் கடல் என்ற பொதுமைபற்றிக் கலமார் கடல் எனக் கூறியதாகக் கொள்க.

கொல்லை எருதேறி — கொல்லை என்னும் முல்லை நிலத்தைக் குறிக்கும் இச் சொல் அந்நிலத்துக் கடவுளாகிய திருமாலை இங்குக் குறித்தது. திருமால் சிவபெருமானுக்கு இடபவாகனமானது முப்புரம் எரி செய்த போது என்பது புராணவரலாறு. விரிவு தட்ச காண்டம் ததீசி உத்தரப் படலத்துள் காண்க.

தென்னை மரத்தின் விரியாத வெள்ளை நறும்பாளை யானையின் தந்தம் போல விளங்குகிறது என்பது பின் இரண்டு அடிகளின் பொருளாகும்.

நாளிகேரம்—தென்னை; சலமார் கரி—வஞ்சம் உடைய யானை; மருப்பு — தந்தம்.

மாகரஞ்சேர் அத்தியின்தோல் போர்த்துமெய்ம்மாலான
சூகரஞ்சேர் எயிறுபூண்ட சோதியன்மேதக்க
ஆகரஞ்சேர் இப்பிமுத்தை அந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ் சண்பைநகராரே. 6-7

6—7. பெரிய கரத்தினை (துதிக்கையை) உடைய யானையின் தோலை உடலின் மேல் போர்த்து, திருமாலாகிய

பன்றியின் பல்லை அணிந்துகொண்ட சோதியனாகிய சிவ பெருமான், பெருமையுடைய கடலைச் சேர்ந்த முத்துச் சிப்பிகளைக் கடலின் அலைகள் குளிர்ச்சி பொருந்திய வயல் களுக்கே தள்ளுகின்ற திருச்சண்பையில் கோயில் கொண்ட வராவார்.

மாலான சூகரம் — திருமாலின் வராகாவதாரத்தைக் குறித்தது. வராகத்தின் செருக்கை அடக்கி அதன் பல்லைப் பிடுங்கி இறைவர் அணிந்து கொண்ட வரலாறு கந்த புராணம் தக்ஷ காண்டம் ததீசி உத்தரப்படலத்தில் காண்க.

இருளைப்புரையும் நிறத்திலரக்கன் றனையீடழிவித்து
அருளைச்செய்யும் அம்மான்ஏரா ரந்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர் வரையார்திரைக்கையால்
தரளத்தோடு பவளம்ஈனுஞ் சண்பைநகராரே. 8

8. இருளையொத்த கரிய நிறத்தினனான இராவணனை ஈடழித்துப் பின்னர் அவனுக்கே அருளையும் செய்த பெரு மான், அழகிய குளிர்ச்சி பொருந்திய மணத்தினால் மயக்கத் தையுடைய வண்டுகள் பாட மலைபோலும் அலைகளாகிய கைகளால் கடலானது முத்துக்களோடு பவளத்தையும் கொடுக்கின்ற திருச்சண்பைநகரார் ஆவர்.

ஈடு — பெருமை, வலிமை முதலிய பொருள்கள்.

அம்மான் — அரிய மகன் என்பது திருத்தருமை ஆதீனக் குறிப்புரை. மகன் இங்கு கடவுள் என்ற பொருளில் கொள் ளப்பட்டது.

மருள் — இதற்கு மருள் என்ற பண் என்று பொருள் கொண்டனர் திருத்தருமையாதீனக் குறிப்புரை ஆசிரியர். அதாவது வண்டுகள் மருள் என்ற பண்ணைப் பாடின என்பது அதன் பொருள்.

வண்டுகள் பாட கடல் அதற்குப் பரிசளிப்பது போல தனது மலையையொத்த நெடிய அலைகளாகிய கரங்களால்

முத்தையும் பவளத்தையும் அளிக்கின்றன. அதுபோல பக்தர்கள் பாட இறைவனும் விலைமதிப்பில்லாப் பரிசாகிய தனது திருவருளை வாரி வழங்குவான் என்ற உள்ளுறை பொருள் தோன்றுதல் கண்டு கொள்க. சுரும்பு — வண்டு கள்.

அளக்கர் — கடல்; வரையார்திரை — மலையை ஒத்து உயர எழும் அலைகள்.

மண்டான்முழுதும் உண்டமாலும் மலர்மிசைமேலயனும்
எண்டானறியா வண்ணம்நின்ற இறைவன்மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித் தாமரைத்தாதின்மேற்
பண்டான்கொண்டு வண்டுபாடுஞ் சண்பைநகராரே. 9

9. உலகத்தை முழுவதும் உண்டவன் எனப்படுகின்ற திருமாலும், தாமரைமேல் வீற்றிருக்கும் பிரமதேவனும் எவ்வளவும் அறியாத வண்ணம் நின்ற இறைவனாகிய மறை களை ஓதிய சிவபெருமான் வண்டானது குளிர்ச்சி பொருந்திய குவளையின் தேனை அருந்தித் தாமரையின் மகரந்தத்தையும் உண்டு நல்ல பண்ணைப்பாடுகின்ற திருச்சண்பைநகரார் ஆவார்.

எண்டான் — என்தான். அதாவது எவ்வளவும் என்றபடி.

போதியாரும் பிண்டியாரும் புகழலசொன்னாலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன்இருநான்கின்
மாதிசித்தர் மாமறையின் மன்னியதொன்னூலர்
சாதிகீதே வர்த்தமானர் சண்பைநகராரே. 10

10. போதிமரத்தை வழிபடுகின்ற பௌத்தர்களும், அசோக மரத்தை வழிபடுகின்ற சமணர்களும் புகழல்லாத வார்த்தைகளைப் பேசினாலும் அவற்றையும் புகழாகவே கொண்டருளும் நிமலனாகிய சிவபெருமான், அட்டமாசித்தி கள் வல்லவர்களும் சிறந்ததான வேதங்களாகிய பழைய நூல்களைக் கற்றறிந்தவரும் உயர்ந்த கீதங்களை இசைப்பதில் நிலைத்திருப்பவரும் மன்னிய திருச்சண்பைநகரார் ஆவர்.

மன்னுதல் — முக்காலத்தும் அழிவின்றி இருத்தல்.

வந்தியோடு பூசையல்லாப் போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்யுஞ் சண்பைநகர்மேய
அந்திவண்ணன் றன்னையழகார் ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதிசேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. வந்தித்தலோடு பூசைகள் செய்யாத காலங்களில் வேதங்களை ஓதியும், சந்தியாகாலங்களில் சமாதியில் நிலைத்திருப்பதை மேற்கொண்டும் ஒழுகுபவர்கள் நிரம்பிய திருச்சண்பைநகர் மேய அந்திவண்ணனாகிய சிவபெருமானைத் துதித்து அழகு நிறைந்த ஞானசம்பந்தன் பாடியவைகளைச் சிந்தைசெய்து பாடவல்லவர்கள் சிவகதியை அடைவார்கள்.

வந்தித்தல் – வணங்குதல். மறை – வேதம், சமாதி செய்தல் — நிஷ்டைகூடுதல்.

அந்திவண்ணன் — மாலை நேரத்துச் செவ்வானம் போன்ற நிறமுடையவன், சிவபெருமான்.

அந்திவண்ணத்து எம் இறை என்று சொல்லும்போது 'அருளாய்ப் பொலியும் இறைவன்' எனப்பொருள் உரைப்போரும் உளர்.

சிந்தை செய்து பாடுதல் – ஒருமைப்பட்ட மனதுடன் பாடுதல்.

குறிப்பு — இப்பதிகத்தின் 7ம் திருப்பாடல் சிதைந்து போய்க் கிடைக்காதாயிற்று



சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருச்சண்பைநகர் — 2

(சீகாழி)

பண் : சாதாரி] திருவிராகம் [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

எந்தமது சிந்தைபிரி யாதபெரு
மானென இறைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள்
செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பைநகரே. 1

பதிகப்பொழிப்புரை : 1. "எம்முடைய சிந்தையை விட்டு அகலாத பெருமானே!" என்று தலைவணங்கித் தேவர்கள் வந்து தோத்திரம் செய்யவும், மணம் வளரும் தூபத்தோடு தீபமும் கூடிய பூசா விதிகளின்படி மாலைக் காலங்களிலும் பொருந்துகின்ற பல சந்திகளிலும் அருச்சனைகளைச் செய்யவும் அவற்றை விரும்புகின்ற அழகனாகிய சிவ பெருமான் அழகுமிக்க கூந்தலையுடைய பெருமையுடைய உமாதேவியாரோடு தங்கியிருக்கும் தலம் திருச்சண்பை நகராகும்.

பெருமான் — தலைவன்; வளர் — இங்கு தூபத்தின் மணம் வளர்தலைக் குறித்தது. வாய்மையதனால்—வாய்மை இங்குப் பூசையின் விதிகளைக் குறித்தது, அதாவது பூசை விதிகளின் படி என்பது பொருள்.

அந்தி — மாலை நேரம்; சந்தி — இரு பொழுது கூடுகின்ற நேரம், காலைச் சந்தி, மாலைச் சந்தி எனப்படும். 'பிராதஸ் சந்தியா', 'சாயம் சந்தியா' என்பது வடமொழி வழக்கு. அழகன் — சுந்தரன், சிவபெருமான்.

சந்தம் — அழகு; குந்தளம் — பெண்களின் கூந்தலுக்குப் பெயர்.

இமையவர்கள் வணங்கித் துதிக்கவும் அருச்சனைகளை விதிப்படிச் செய்யவும் அவற்றை விரும்பி ஏற்று அருள் புரியும் பெருமான் நிலவுலகத்தில் தங்கிய பதி திருச் சண்பைநகர் என்பதாம்.

அங்கம்விரி துத்தியர வாமைவிர
வாரமமர் மார்பிலழகன்
பங்கய முகத்தரிவை யோடுபிரி
யாதுபயில் கின்றபதிதான்
பொங்குபர வைத்திரை கொணர்ந்துபவ
ளத்திரள் பொலிந்தவயலே
சங்குபுரி யிப்பிதர ளத்திரள்
பிறங்கொளிகொள் சண்பைநகரே. 2

2. திருமேனியிலே பரந்த புள்ளிகளையுடைய பாம்பு களையும் ஆமையோட்டையும் மார்பில் கலந்த மாலையாக விரும்பி பணிந்த அழகனுகிய சிவபிரான், தாமரை மலர் போன்ற முகத்தையுடைய உமாதேவியாரோடு பிரியாது வாழ்கின்ற திருப்பதியாவது (யாதெனில்), பொங்கியெழும் கடலலைகள் அடித்துக்கொண்டு வந்து குவித்த பவளத் திரள்களின் பக்கத்திலே வலம்புரிச்சங்குகளும், சிப்பிகளும் சொரிந்த முத்துக்களின் மிகுதியான பிரகாசத்தைக் கொண்ட திருச்சண்பைநகராகும்

அங்கம் — திருமேனி; துத்தியரவு — படப்புள்ளிகளை உடைய பாம்புகள்.

பரவைத் திரை — கடல் அலைகள்; புரிசங்கு — சுற்றிய (இங்கு வலமாகச் சுற்றிய) சங்கு, அதாவது வலம்புரிச் சங்கு. இப்பி — சிப்பி.

தரளத்திரள் — முத்துக்களின் குவியல்கள்.

பிறங்கொளி — மிகுதியான ஒளி, பேரொளி, அல்லது விளங்கும் ஒளி.

கடல் அலைகள் பவளத்தை அடித்துக் கொணர்ந்து குவிக்கின்றன. அவைகளின் அருகே வலம்புரிச்சங்குகளையும் இப்பிகளையும் கொண்டு சேர்க்கின்றன. அங்ஙனம் சேர்ந்த சங்குகளும் இப்பிகளும் சொரிந்த முத்துக்களின் ஒளி பவளங்களின் ஒளியோடு சேர்ந்து மிகுதியாகப் பிரகாசிக்கின்றது என்பதாம்.

போழுமதி தாழுநதி பொங்கரவு
தங்குபுரி புன்சடையினன்
யாழின்மொழி மாழைவிழி யேழையிள
மாதினொ டிருந்தபதிதான்
வாழைவளர் ஞாழன்மகிழ் மன்னுபுனை
துன்னுபொழின் மாடுமடலார்
தாழைமுகிழ் வேழமிகு தந்தமென
உந்துதகு சண்பைநகரே. 3

3. (வட்ட வடிவைப்) பிளந்தால் அனைய பிறைச் சந்திரனும் கீழே பாய்ந்து ஓடுதலையுடைய கங்கை நதியும், பொங்கி எழுந்து ஆடும் பாம்புகளும் தங்குகின்ற முறுக்கிய புன்சடையினையுடைய சிவபிரான், வீணையின் ஓசையை ஒத்த மொழியும், மாம்பிஞ்சு போன்ற கண்களையுமுடைய உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்த பதியாவது (யாதெனில்) வாழை மரங்களும், புலிநகக்கொன்றை மரங்களும், மகிழ மரங்களும், நிலைபெற்ற புன்னை மரங்களும் நெருங்கியடர்ந்த சோலைகளின் பக்கத்தில் மடல்கள் பொருந்திய தாழையின் அரும்பு யானையின் ஒடிந்த தந்தம் என்று தள்ளுதல் செய்யப்படுகின்ற திருச்சண்பைநகர் ஆகும்.

போழுதல் — பிளத்தல்.

ஏழை இளமாது — தனக்கென ஒரு செயலிலாது அனைத்தும் கணவனது செயலாகவே பெண்கள் இருத்தலால் ஏழை எனப்படுவர். அபலா என்பது வடமொழி வழக்கு. இளமாது — இளமையுடைய உமாதேவியாரைக் குறித்தது.

உமாதேவியார் தனக்கென ஒரு செயலிலாது அனைத்தும் ஈசன் செயலாக நிற்பதை "எத்திறன் நின்றான் ஈசன் அத்திறத்து அவளும் நிற்பாள்" என்ற சிவஞான சித்தியார் மொழியாலும் அறிக (சித்தியார் சுபக்கம் 2-ம் சூத்திரம், 75-வது திருவிருத்தம், (4 ம் அதிகரணம்.)

தாழையின் மொட்டு ஒடிந்த யானைத்தந்தம் போன்றிருப்பதால் அவை சூடுதற்கு ஆகா என்று தள்ளப்படுகின்றது என்பதையே "தாழை முகிழ் வேழம் இரு தந்தமென உந்துதகு..." எனக் கூறியருளியதாகக் கொள்க.

கொட்டமுழ விட்டவடி வட்டணைகள்
கட்டநட மாடிகுலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டுமலி
பாவையொடு மேவுபதிதான்
வட்டமதி தட்டுபொழி லுட்டமது
வாய்மைவழு வாதமொழியார்
சட்டகலை யெட்டுமரு வெட்டும்வளர்
தத்தைபயில் சண்பைநகரே. 4

4. முழவுகள் கொட்ட, வைத்த பாதங்கள் தாளத்திற்கு ஏற்ப, நடனமாடும் சிவபெருமான், விளங்குகின்ற பட்டத்தை நெற்றியில் அணிந்து, சூடிய மலர் மாலைகளின் மணம் மிகுந்த பாவைபோல்வாளாகிய உமாதேவியாருடன் தங்குகின்ற தலம் (யாதெனின்) தமது உண்மை தவறாத மொழிகளையுடைய பெரியோர்களுடைய முறையான அறுபத்துநான்கு கலைகளையும் சந்திரன் தடுக்கப்பட்ட பொழிலுள் வளர்கின்ற கிளிகள் சொல்லுதலையுடைய திருச்சண்பைநகர் ஆகும்.

முழவு — மத்தளம், பறை போன்ற வாத்தியங்கள். மத்தளத்தின் ஒலிக்கேற்பக் கால் வைத்து நடனமாடுதலையே 'இட்டவடி வட்டணைகள் கட்ட நடமாடி...' என்றார்.

நுதல் கட்டு பட்டம் — நெற்றியிலே கட்டுகின்ற ஒரு வகை அணி விசேடம். நெற்றிப் பட்டம் என்பர். இதை நடனமாடுதலின் போது தரிப்பர் போலும்.

வட்டமதி தட்டு பொழில் — பொழிலின் உயர்ச்சியாலும் அடர்த்தியாலும் சந்திரன் ஒளி பொழிலுள் நுழையாது தடுக்கப்படுதலையே இங்ஙனம் கூறினர்.

வாய்மை வழுவாத மொழியார் — எப்போதும் சத்திய வார்த்தைகளையே பேசுபவர்கள், சொன்ன சொல் தவறாதவர்கள். இத்தகையோர் பயிலுகின்ற அறுபத்துநான்கு கலைகளையும் கேட்டிருந்த கிளிகள், தாமும் பொழில்களில் தங்கி அக்கலைகளைப் பயில்கின்றன என்பது இப்பாடலின் கடைசி அடியின் கருத்தாகும். இத்தகைய பெருமை வாய்ந்த திருச்சண்பைநகரே நெற்றிப் பட்டமணிந்து, கொட்டுகின்ற முழவங்களின் தாளத்திற்கியையக் காலடி வைத்து நடனமாடுகின்ற சிவபிரான் உமாதேவியாரோடு தங்கியிருக்கும் பதி என்பதாம்.

பணங்கெழுவு பாடலினொ டாடல்பிரி
யாதபர மேட்டிபகவன்
அணங்கெழுவு பாகமுடை ஆகமுடை
அன்பர்பெரு மானதிடமாம்
இணங்கெழுவி யாடுகொடி மாடமதி
லீடுவிரை யார்புறவெலாந்
தணங்கெழுவி யேடலர்கொ டாமரையி
லன்னம்வளர் சண்பைநகரே. 5

5. இசை பொருந்திய பாடலையும் ஆடலையும் நீங்காத பரமேட்டியும் அறுகுண பரிபூரணனும், உமாதேவியார் பொருந்திய இடப்பாகத்தையுடைய திருமேனியையுடையவனும், அன்பர்கட்கு அருள் புரியும் பெருமானுமாகிய சிவபிரானது இடம் (யாதெனில்) ஒன்றோடொன்று இணங்கியாடுமாறு நாட்டப்பட்ட கொடிகளையுடைய மாடங்களும்

மதில்களும் உடையதும் மணம் பொருந்திய புறவிடங்களில் எல்லாம் குளிர்ச்சி பொருந்திய இதழ்கள் விரிந்த தாமரையின் மேல் அன்னங்கள் வளர்கின்ற திருச்சண்பை நகர் ஆகும்.

பணங்கெழுவு — பண்+அம்+கெழுவு, பண்—இசை. கெழுவுதல்—பொருந்துதல்; அம்—சாரியை அதாவது சார்ந்து வரும் இடைச்சொல்.

அணங்கெழுவு — அணங்கு+கெழுவு, அணங்காகிய உமாதேவியார் பொருந்திய.

இணங்கெழுவி — இணங்கு+எழுவி, ஒன்றோடொன்று இணங்கும்படி நாட்டப்பட்டு.

புறவெலாம் — புறவு எலாம்; புறவு என்பதற்கு முல்லை நிலப்பகுதி எனவுங் கொள்ளலாம். நகருக்குப் புறம்பான இடங்கள் எல்லாம் என்றும் கொள்ளலாம்.

தணங்கெழுவி — தண்+அம்+கெழுவி தன்மை பொருந்திய, இங்கும் 'அம்' சாரியை,

பரமேட்டி —த. மா. 12, பக்கம் 61-ல் கூறியவை காண்க.

பகவன் — ஐச்வர்யாதி அறுகுண பரிபூரணன். திருக்கோசைவயம்—1, 5-வது திருப்பாடல் உரையில் கூறப்பட்டுள்ளவற்றையும் இங்கு கொள்க,

பாலனுயிர் மேலணவு காலனுயிர்
பாறவுதை செய்தபரமன்
ஆலுமயில் போலியலி யாயிழைத
ளோடுமமர் வெய்துமிடமாம்
ஏலமலி சோலையிள வண்டுமலர்
கிண்டிநற வுண்டிசைசெயச்
சாலிவயல் கோலமலி சேலுகள
நீலம்வளர் சண்பைநகரே 6

6. பாலனாகிய மார்க்கண்டேயனது உயிரின் மீது சென்ற இயமனது உயிர் நீங்கும்படி உதைத்தலைச் செய்த

பரமன், ஆடுகின்ற மயில்போன்ற சாயலையுடைய, தேர்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த உமாதேவியாரோடு தங்குதல் செய்தருளிய தலம் (யாதெனில்) ஏலம் முதலிய ஔஷதி வகைகள் மிகுந்த சோலைகளில் வண்டுகளின் கூட்டம் மலர்களைக் கிளறி அவற்றிலுள்ள தேனைக் குடித்து இரீங்காரம் செய்தலையும், நெல் வயல்களிலே அழகு மிகுந்த மீன்கள் துள்ளிப் பாய்தலையும், நீலோத்பலங்கள் செழித்து வளர்தலையுமுடைய திருச்சண்பைநகர் ஆகும்.

இயலி — இயலை அதாவது சாயலையுடையவள்.

ஆயிழை — ஆராய்ந்து தேர்ந்தெடுத்த ஆபரணங்கள் எனப்பொருள்பட்டு அவைகளையணிந்த பெண்ணுக்கு ஆயிற்று.

விண்பொயத னுன்மழைவி ழாதொழியி
    னும்விளைவு தான்மிகவுடை
மண்பொயத னுல்வளமி லாதொழியி
    னுந்தமது வண்மைவழுவார்
உண்பகர வாருலகி னூழிபல
    தோறுநிலை யானபதிதான்
சண்பைநக ரீசனடி தாழுமடி
    யார்தமது தன்மையதுவே. 7

7. வானம் பொய்த்து அதனால் உலகில் மழை பொழியாதொழியினும், மிகுந்த விளைச்சலைத் தரும் பூமியானது வறண்டமையால் வளம் அற்றுப் போனாலும் (அடியவர்களுக்கும் மற்றும் பசித்தவர்களுக்கும்) உணவு தருதலைச் செய்யத் தமது கொடைத்தன்மையில் தவறாதவர்கள், நெடிய உலகத்தில் பல ஊழிகளிலும், நிலையாக இருந்த திருப்பதி திருச்சண்பைநகர் ஆகும். அத்தலத்துக் கோயில் கொண்ட சிவபிரானது திருவடிகளைத் தொழுது வணங்குகின்ற அடியார்களது தன்மையும் அதுவேயாகும்.

நெடிய இந்த உலகத்தில் வானம் பொய்ப்பினும் மண் பொய்ப்பினும் தாம் பொய்யாது பசித்தவர்க்கு உணவு

அளிக்கும் வண்மை வழுவாதவர்கள் ஊழி தோறும் நிலைத்திருந்த பதி திருச்சண்பைநகர் என்று கூறியதாகக் கொள்க.

சண்பைநகர் கோயில் கொண்ட ஈசனடி தாழும் அடியார் தன்மையதுவே என்றது அடியார்கள் வானதிந்துளங்கினும் மண் கம்பமாகினும் சிறிதும் அஞ்சாது தம் வழிபாடு குறையாது ஈசனையே பூசிப்பர் என்பதாம். (தருமபுரக் குறிப்புரையின் கருத்து).

அடியார்களும் வண்மை வழுவாதவர்களாகி பசித்தவர்க்கு உணவிடுவர் எனக்குறிப்பிட்டதாகக் கொள்ளினும் அமையும்.

வரைக்குல மகட்கொரு மறுக்கம்வரு
    வித்தமதி யில்வலியுடை
அரக்கனது ரக்கரசி ரத்துற
    அடர்த்தருள் புரிந்தவழகன்
இருக்கையத ருக்கன்முத லானவிமை
    யோர்குழுமி யேழ்விழவினில்
தருக்குல நெருக்குமலி தண்பொழில்கள்
    கொண்டலன சண்பைநகரே. 8

8. இமயமலையரசனின் சிறந்த மகளாகிய உமாதேவியாருக்கு ஓர் அச்சத்தை விளைவித்த அறிவில்லாத (ஆனால்) வலியுடைய அரக்கனான இராவணனது மார்பு, கைகள், தலைகள் இவைகளில் நன்கு அழுந்துமாறு (தமது கால் விரலால்) நெருக்கிப் பின்னர் அவனுக்கு அருளும் புரிந்த அழகனாகிய சிவபெருமான் இருப்பிடம்(யாதெனின்) சூரியன் முதலிய தேவர்கள் ஏழாவது நாள் திருவிழாவினில் கூடி வணங்கவும், மேகம் படிந்தனவாகிய குளிர்ச்சி பொருந்திய பொழில்கள் தேவருலகத்து மரங்களின் கூட்டத்தை நெருக்குதலைச் செய்கின்றதுமான திருச்சண்பைநகரே யாகும்.

திருக்கயிலையைப் பெயர்த்தெறிவேன் என்று அதனை அசைத்தபொழுது உமாதேவியார் சிறிது அச்சம் எய்தினர்

என்று குறிப்பிட "வரைக்குல மகட்கு ஒரு மறுக்கம் வருவித்த..." எனக்கூறியருளினார். அழகன் என்பது வடிவழகு மட்டும் அன்றித் தன் மலையைப் பெயர்த்தெடுத்த குற்றத்தையும் பொறுத்து அவனுக்கருள் செய்த அருளின் அழகுமாம்.

இருக்கையது — இருப்பிடமாவது.

இமையோர் குழுமி — இமையோர் குழு முதல் இறைவனுக்கு வணக்கம் செலுத்தவேயாகலின் 'வணங்க' என்று ஒரு சொல் சேர்த்து தேவர்கள் கூடி வணங்கவும் என்று பொருள் உரைக்கப்பட்டது. ஏழாம் திருவிழாவில் தேவர்கள் வந்து வணங்கும் ஐதிகம் உண்டு போலும். எனவே 'ஏழ் விழவினில் குழுமி' என்றருளிச் செய்தனர் ஆளுடைய பிள்ளையார்.

வானுலகத்து இமையோர்கள் இறைவனை வணங்க நிலவுலகத்துக்கு வருகின்றனர். ஆனால் நிலவுலகத்துச் சண்பைநகரின் பொழில்கள் வானளவு உயர்ந்து சென்று அங்குள்ள தருக்குலத்தை (தேவ விருட்சங்களின் தொகுதியை) நெருக்குகின்றன என்று கூறியருளிய நயம் காண்க.

நீலவரை போலநிகழ் கேழலுரு
நீள்பறவை நேருருவமாம்
மாலுமல ரானுமறி யாமைவளர்
தீயுருவ மானவரதன்
சேலுமின வேலுமன கண்ணியொடு
நண்ணுபதி சூழ்புறவெலாஞ்
சாலிமலி சோலைகுயில் புள்ளினொடு
கிள்ளைபயில் சண்பைநகரே. 9

9 நீலமலையைப் போலப் பொருந்திய பன்றியின் வடிவத்தைக் கொண்ட திருமாலும், பெரியதொரு அன்னப் பறவையின் உருவந் தாங்கிய பிரமதேவனும் அறியாத

வகையில் வளர்ந்து ஓங்கிய ஒரு தீப்பிழம்பின் வடிவாகிய சிவபெருமான், மீனையும் சிறந்த வேலையும் ஒத்த கண்களை உடைய உமாதேவியாரோடு தங்கிய திருப்பதியாவது (யாதெனில்) தலத்தைச் சூழ்ந்த அயலிடங்களிலெல்லாம் நெல் பயிர்கள் மலிந்ததும், சோலைகளில் குயில்கள் மற்றும் பறவைகளோடு கிளிகளும் வசிக்கின்றதுமான திருச்சண்பை நகராகும்.

கேழல்—பன்றி. நீள்பறவை—அன்னப்பறவை.
வரதன் — வரங்கள் தருபவன், சிவபெருமான்.

போதியர்கள் பிண்டியர்கள் போதுவழு
வாதவகை உண்டுபலபொய்
ஓதியவர் கொண்டுசெய்வ தொன்றுமிலை
நன்றதுணர் வீருரைமினே
ஆதியெமை யாளுடைய அரிவையொடு
பிரிவிலி அமர்ந்தபதிதான்
சாதிமணி தெண்டிரை கொணர்ந்துவயல்
புகவெறிகொள் சண்பைநகரே. 10

10. அரசமரத்தைப் போற்றுதல் செய்யும் பௌத்தர்களும், அசோகமரத்தை வணங்கும் சமணர்களும் ஆகியவர்கள் வேளை தவறுத விதம் உணவையுண்டு பல பொய்யான உரைகளைச் சொல்லுபவர் ஆவர். (அவர்களது பொய் உரைகளை) மேற்கொண்டு செய்யத்தக்கது யாதுமில்லை. நல்லது எது என்று அறிபவர்களே! முதன்மைக் கடவுளும், எம்மையெல்லாம் ஆட்கொண்டருள் புரிதலையுடைய, உமா தேவியாரோடு என்றும் பிரியாது இருப்பவனுமாகிய சிவ பெருமான் தங்கிய திருத்தலமாவது உயர்ந்த மணிகளைத் தெளிவாகிய கடலலைகள் அடித்துக் கொணர்ந்து வயல் களிலே போய் விழும்படி எறிகின்ற திருச்சண்பைநகராகும். (அதனையே) புகழ்ந்து பேசுவீர்களாக. தலத்தைப் புகழ்வீர் என்று கூறினும், தலத்துப் பெருமானையே கூறியதாகக் கொள்க.

போதியர்கள், பிண்டியர்கள் இவற்றின் விளக்கம் முன் வந்த இடங்களில் உரைத்தது கண்டு கொள்க. (த. மா. 11, பக்கம் 66.)

சாதி மணி — சாதி என்னும் சொல் உயர்ந்த, சிறந்த என்பன போன்ற பொருள்களில் வந்தது. சாதிமாம்பழம் என்பது போலக் கொள்க.

சமணர்கள் உண்பது உச்சிப்போதிலும், புத்தர்கள் உண்பது மாலைப் பொழுதிலுமாம். இப்படி இவர்கள் காலந் தவறாது உண்ணுதலைத் தவிர வேறு பயன் தருஞ் சொற்கள் எதனையும் கூறார். அவர் கூறும் உரைகள் யாவும் பொய்யே. எனவே நன்னெறியறியும் அறிவுடையவர்களே! திருச்சண்பைநகரில் அரிவையோடும் அமர்ந்த பிரானையே புகழ்ந்து பேசுங்கள் என்று அறிவுறுத்தியது கண்டுகொள்க.

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு
சங்கரன் மகிழ்ந்தமருமூர்
சாரின்முர றெண்கடல் விசும்புற
முழங்கொலிகொள் சண்பைநகர்மேல்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ்
ஞானசம் பந்தனுரைசெய்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர்
சேர்வர்சிவ லோகநெறியே. 11

திருச்சிற்றம்பலம்

11. கச்சணிந்த கொங்கைகளையுடைய சிறந்தவளாகிய உமாதேவியாரோடு சங்கரன் என்றதொரு பெயர் கொண்ட சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளி இருக்கும் தலமாகிய, வீதிகள் முதலிய இடங்களில் கடலோசைபோல முழங்குகின்ற பேரொலியானது வானுலகைச் சென்றடையுமாறு உள்ளதான திருச்சண்பைநகர்மேல் இவ்வுலகில் மிகுந்த புகழ் நிலைத்து நிற்றலையுடைய தமிழ் ஞானசம்பந்தன் உரைசெய்த சிறப்புமிக்க இச்செந்தமிழ்ப் பாடல்

களைப் பாடுகின்றவர்கள் சிவலோகத்தையடையும் நல்ல நெறியில் சென்று சேர்வர்.

சங்கரன் — சம் சுகம், கரன்—செய்பவன். உயிர்களுக்கு இன்பத்தைத் தருபவன் என்பதாம். "இன்பந்தருதலால் சங்கரன்"... என்பர் ஸ்ரீ சிவஞான சுவாமிகள்.

சார் — இடம் என்ற பொருள்தரும் இச்சொல் இங்கு வீதி முதலிய இடங்களைக் குறித்தது.

திருச்சண்பைநகர் வீதிகளில் நிறைந்த ஓசைபற்றி திருக்கொச்சைவயம் — 1 முதல் திருப்பாடலில் உரைத்த வற்றையும் இங்குக் கொள்க.

திருச்சண்பைநகர்மேல் தமிழ்ஞானசம்பந்தன் உரை சீரிலமலி செந்தமிழ்கள் செப்புமவர் சிவலோக நெறி சேர்வர் என்று பொருள் முடிவு செய்து கொள்க.

சிவம்.

(80-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவம்

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

(தொடர்ச்சி 79-ம் பக்கம்)

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்



யத்யத் கர்ம கரோமி
தத்ததகிலம்
சம்போ தவாராதனம்